Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 16 சனிக்கிழமை (30-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:216

## மக்கள் வீதிக்கு வந்து போராடும் நிலை உருவாகும்

# அரசு கவிழ்க்கப்பட்டால்

# நாட்டில் குழப்பம் வரும்!

### எச்சரிக்கின்றார் அமைச்சர் திஸாநாயக்க



கொழும்பு,ஜூன்30

**தனது சதித்திட்டம் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி தற்போதைய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசைப் பதவி கவிழ்க்குமானால் நாட்டில் குழப்பம், அமைதியின்மை, நெருக்கடி நிலை ஆகியவை உருவாகும்.**

**- இவ்வாறு சமுர்த்தி மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளருமான எஸ்.பி. திஸாநாயக்க எச்சரித்திருக்கின்றார்.**

அரசு சார்புத் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அந்தப் பேட்டியில் அவர் கூறியதாவது:-

ஐ.தே.கட்சியின் சதித்திட்டம் மூலம் அவசரகாலச் சட்டம் தோற்கடிக்கப்பட்டால் மக்கள் வீதியில் இறங்கிப் போராடவேண்டிய நிலை ஏற்படும்.

அவசரகாலச் சட்டம் தோற்கடிக்கப்படுமானால் நாட்டில் பெரும் நெருக்கடி நிலை ஏற்படும். படையினர் தமது யுத்த நடவடிக்கைகளை தொடரமுடியாமல் போகும். வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் அனைத்தையும் மூட வேண்டிய கட்டாயமும் உருவாகும். அத்துடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிச் சந்தேக நபர்களை விடுதலை செய்ய வேண்டிய நிலையும் ஏற்படும் எனவே இவ்

(14ஆம் பக்கம் பார்க்க)

### புலி உறுப்பினர் மூவர் உயிரிழப்பு

வவுனியா,ஜூன்30

பல்வேறு சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த 3 உறுப்பினர்களின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 19ஆம் திகதி தண்ணீர் முறிப்பு என்ற இடத்தில் இடம் பெற்ற மோதலில் மேஜர் எழில் வண்ணன்(இராஜதுரை விஜயகாந்த் - கிளிநொச்சி), துணைப்படை வீரரான கந்தசாமி தேவகுமார் (யாழ்ப்பாணம்) ஆகியோரும் -

நேற்று முகமாலைப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் அமுதி (நடராஜா யசோதினி- கிளிநொச்சி) என்பவரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

(க-7)

## திருமலை நகரில் பொலீஸார் மீது நேற்றிரவு கைக்குண்டு வீச்சு!

திருகோணமலை,ஜூன்30

திருகோணமலை நகரின் மையப் பகுதியிலுள்ள மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு அருகில் காவற் கடைமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது நேற்றிரவு 7.50 மணியளவில் இனந் தெரியாதோரால் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது.

அங்கு காவலில் நின்ற பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், சிவில் உடையில் அங்கு வந்த ஊர்காவலர் ஒருவரும் சிவிலியன் ஒருவரும் இக்குண்டுவீச்சில் காயமடைந்து திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 7ஆம் திகதி நகரிலுள்ள காளிகோயிலுக்கு முன்னால் உள்ள காவலரணை நோக்கி கைக்குண்டு ஒன்று வீசப்பட்டதில், சிவிலியன் ஒருவர் உயிரிழந்தது தெரிந்ததே.

### இன்று நாடு திரும்பும்

## சந்திரிகா தலைமையில் நாளை மாலை பொ.ஐ.மு. நாடாளுமன்ற குழுக் கூட்டம்

கொழும்பு,ஜூன்30

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முகமாக தற்போது லண்டனில் தங்கியுள்ள ஜனாதிபதி இன்று கொழும்பு திரும்புவார் என அரச வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து இந்தக் கூட் டத்தில் ஜனாதிபதி எம்.பிக்களுடன் விரிவான பேச்சுக்களை நடத்துவார் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

(14ஆம் பக்கம் பார்க்க)

## 'பௌத்த' மனச்சாட்சியை தட்டியெழுப்புவதற்காக

# படையினரின் மனித உரிமை மீறல்களை எதிர்க்கும் தினமாக 6ஆம் திகதி பிரகடனம்

### தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு அறிவிப்பு

கொழும்பு,ஜூன்30

அரச படைகளின் பாலியல் வன்முறைகள், கைதுகள், சித்திரவதைகள், கொலைகள் ஆகியவற்றைக் கண்டித்து -

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பைக் காட்டும் வகையில் எதிர்வரும் 6ஆம் திகதியை அரச படையினரின் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான எதிர்ப்புத் தினமாகத் தமிழ் - முஸ்லிம் கட்சியின் கூட்டமைப்பு பிரகடனம் செய்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமைப்பின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை வெளியிடுவதற்காக நேற்றுக் கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

இந்த மாநாட்டில் வெளியிடப்பட்ட விடயங்கள் வருமாறு:-

இலங்கையில் கைதுகள், சித்திரவதைகள், கொலைகள், பாலியல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் மகளின் பட்டமளிப்பு விழாவில் ஜனாதிபதி சந்திரிகா பங்குபற்றினார்!

### கேம்பிரிஜ் பல்கலையில் கடும் பாதுகாப்பு

லண்டன்,ஜூன்30

லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில். நேற்று முன் தினம் நடைபெற்ற தனது மக ளின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் மகளான யசோதரா குமாரதுங்க கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரியில் படிப்பை மேற்கொண்டிருந்தார்.

பட்டமளிப்பில் ஜனாதிபதி சந்திரிகா கலந்து கொண்டதை அடுத்து பல்கலைக் கழகத்தைச் சூழப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்ததாக லண்டன் செய்திகளை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

இதேவேளை -

(14ஆம் பக்கம் பார்க்க)

## இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து புதிய சிங்கள கட்சியை ஸ்தாபிக்க முயற்சி

### மூத்த தலைவர்கள் திரைமறைவில் மும்முரமாகப் பேச்சு

கொழும்பு,ஜூன்30

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் ஐ.தே. கட்சி அரசியல் முற்றுகைக்காக வியூகம் ஒன்றை ஒருபுறம் வகுத்திருக்க -

இந்த இரு அணிகளின் தரப்பிலும் உள்ள மூத்த தலைவர்கள் சிலர் இந்த இரு பிரதான சிங்களக் கட்சிகளையும் இணைத்து ஐக்கிய சிங்கள கட்சி ஒன்றை ஸ்தாபிப்பதற்கான திரை மறைவுப் பேச்சுக்களில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாக தெரியவருகிறது.

ஐக்கிய ஸ்ரீலங்கா கட்சி (UNITED SRILANKA PARTY - USLP) என்று பெயரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திரைமறைவுப் பேச்சுக்களில் பங்குபற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் ஒருவர் கூறியதாவது:-

சிறுபான்மையினரின் கட்சிகளில் தங்கியிருக்கும் நிலையை கைவிடுவதற்கு உரிய நேரம் வந்துவிட்டது என்று ஸ்ரீ.ல.சு.க. மற்றும் ஐ.தே.க. தலைவர்கள் கருதுகின்றனர்.

சிங்களவர்கள் தங்களது நிலையை அரசியல் ரீதியாகப் பலப்படுத்தாவிட்டால் அவர்களால் தங்களுடைய மேன்மைத்தன்மை, அடையாளம், கலாசாரம் ஆகியவற்றைப் பேணுவது மிகக்கஷ்டமாக இருக்கும்.

புத்தபிக்குகளும், பல்கலைக்கழக புத்திஜீவிகளும் இந்தக் கட்சிகளின் ஒன்றிணைவை பெரிதும் மதிக்கின்றனர், ஆதரிக்கின்றனர் - என்றார் அவர்.

(உ-3)

## யாழ்.படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால

கொழும்பு,ஜூன்30

பாதுகாப்புப் படைகளின் யாழ். தளபதியாக மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால இன்று முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். தளபதியாக இதுவரை பணி புரிந்த மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா பத்தரமுல்லவிலுள்ள தொண்டர் சேவைப் படைத் தளபதியாக இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து

இதுவரை யாழ்.பிரதித் தளபதியாக இங்கு பணிபுரிந்த மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால யாழ். தளபதி பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் பிரதம அதிகாரியாகப் பணிபுரிந்து வரும் மேஜர் ஜெனரல் நீல் டி டயஸ்க்கும் வன்னியின் கூட்டு நடவடிக்கைத் தளபதிப் பொறுப்பும் நேற்று முதல் வழங்கப்பட்டுள்ளது. (க-3)

### வவுனியாவில் இளைஞர் கைது!

வவுனியா,ஜூன்30

வவுனியா - வாரிக்குட்டியூரைச் சேர்ந்த அரியரட்ணம் சுதர்சன்(வயது 18) என்ற இளைஞன் நேற்று முன் தினம் வவுனியாவில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என மனித உரிமை ஆணைக் குழுவின் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(சு-7-4)

## படையினரின் சூட்டுக்கு இலக்காகி நவாலியில் இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம்,ஜூன்28

நவாலிப்பகுதியில் நேற்று அதிகாலை வேளை மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இளைஞர் ஒருவர் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞனின் சடலத்தில் மார்பு மற்றும் கன்னப் பகுதிகளில் சூட்டுக்காயங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப இளைஞனை விசாரணை செய்யப் படையினர் முயன்ற வேளை அவர் தப்பி ஓட எத்தனித்ததாகவும் -

அச்சமயம் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## மருதானை பாலியல் வல்லுறவு கொடூரம்:

# சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய காவல்துறையினரே இழிசெயல் புரிந்துள்ளனர்

## மகளிர் அபிவிருத்தி நிலையம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூன்30

கடந்த 24ஆம் திகதி மீண்டும் ஒரு தமிழ்ப்பெண், மருதானைச் சோதனை நிலையத்தில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்.

நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய காவல் துறையினரே இத்தகைய காடைத்தனமான இழிசெயலுக்குக் காரணமாக அமைந்துள்ளனர். இது அவர்களது பொறுப்பற்ற செயலை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது.

மகளிர் அபிவிருத்தி நிலையம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

மருதானையில் தமிழ்ப் பெண் சோதனைச்சாவடியில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் தொடர்ந்து வரும் போர் நிலைமைகள் காரணமாக, சட்டம், ஒழுங்கு என்பன சமூக ஒழுங்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பெண்கள், ஆண்கள் என்ற பாரபட்சமின்றி அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றன. பெண்கள் விடயத்தில் அவர்களுக்கென விசேடமாக ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பளிக்கும் ஐ.நா. மரபொழுங்குகள் கூட இன்று செயலற்று நிற்கும் நிலை?

பெண்கள் மீது காட்டப்படும் சகல பாரபட்சங்களையும் நீக்கும் ஐ.நா. மரபொழுங்கு, சித்திரவதையிலிருந்து பாதுகாக்கப்படும் ஐ.நா. மரபொழுங்கு இவை யாவற்றையும் இலங்கை அரசு கௌரவமாக, ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆயினும் இவ்வாறான சட்டங்களின் கீழ், பெண்கள் பாதுகாக்கப்படுகின்றார்களா என்பதை அரசு உறுதிப்படுத்தத் தவறிவிட்டது. இந்நிலையில் இப்பிரகடனங்களின் செயற்பாட்டை ஐ.நாவே மீண்டும் கண்காணிக்கும் நிலை ஏற்பட வேண்டும்.

பாலியல் வல்லுறவு, சித்திரவதைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த போதிலும், இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் இலகுவாகத் தப்பிக்கக் கூடிய வாய்ப்புக்கள் எமது நாட்டில் அதிகம்.

பெண்கள் பாலியல் வல்லுறவு தொடர்பாக தொடர்ந்து வரும் வழக்கு விசாரணைகளில் உறுதியான சாட்சியம்,குற்றவாளிகளை இனங்காணுதல், இவை போன்ற விடயங்கள் உறுதி செய்யப்படுவதில் ஏற்படும் காலதாமதம் பெண்களுக்கு மேலும் விரக்தியையும் பய உணர்வையும் அதிகரிப்பதாக உள்ளது.

சாட்சியங்களை வைத்துக் கொண்டு யாரும் பாலியல் வல்லுறவு புரிவதில்லை. ஆகவே அவசர காலச்சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற போர்வையில் நடைபெறும் இவ்வாறான குற்றங்களுக்கு விரைவான விசாரணைகள் மேற்கொண்டு கடுமையான தண்டனைகளை வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டும் - என்றுள்ளது. (க-3)

# ஆட்சி மாற்றம் ஏற்படுவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டாது

## அஸ்கிரிய - மல்வத்த பீடாதிபதிகளிடம் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கண்டி,ஜூன்30

ஆட்சி மாற்றம் ஒன்றைக் கொண்டு வருவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பதில் நிதி அமைச்சரும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

அஸ்கிரிய - மல்வத்த பீடங்களின் பீடாதிபதிகளை அமைச்சர் பீரிஸ் நேற்றுமுன்தினம் கண்டியில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது அமைசசர் மேலும் தெரிவித்ததாவது:-

தொடரும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காணவேண்டுமாயின் சகல அரசியல் கட்சித் தலைவர்களும், மகாநாயக்க தேரர்களும் ஏனைய மதத்தலைவர்களும் ஒன்றிணைந்து பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு வரவேண்டும்.

பொருளாதாரத் துறையும் திருப்தி தருவதாக இல்லை. எனவே நாட்டைக் கட்டியெழுப்ப பொதுமக்களும், பிக்குமாரும், ஏனைய மதத்தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும். புத்திஜீவிகளும் இதற்கு தம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.

பௌத்த பீடாதிபதிகளின் அறிவுரைகளும், ஆலோசனைகளும் தேவைப்படும் காலம் தற்போது உருவாகியுள்ளது என்று அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

(க-7)

# காணாமற் போனோர் விசாரணை; உறவினர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்பொலீஸ் நிலையத்தில் நடைபெற்றுவரும் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைக்கு காணாமற்போன பின்வருவோரின் பெற்றோரை அல்லது உறவினர்களைச் சமுகமளிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

சுப்பாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை - (இல.13,புதிய பூங்கா வீதி, குருநகர்) பிரான்சிஸ் வெனான் சீஸ் - (இல. 7/7, குருநகர், கொழும்புத்துறை), மனுவல்அந்தோனி - (இல. 26, சென்றல் வெஸ்ரேன் வீதி, குருநகர்), அன்ரன் மிக்கேல் கொல்வின் - (இல.17/7, பீச் றோட், குருநகர்), முருகேசு சிவராசா - (இல.10, குருநகர்),

றொபேட் கெனடிராசா - (இல.39, சாந்த செபஸ்தியன் வீதி, குருநகர்), ஏ.கே.ரகுமான் - (இல.79, பீச் றோட், யாழ்ப்பாணம்), அருள்ராஜ் அனிரஸ்- (இல.15, சென்றல் கிழக்கு வீதி குருநகர்), தேவதாஸ் சுரேஷ்குமார்- (இல.16/6, சந்தை வீதி, யாழ்.)

துரைசிங்கம் செந்தில்நாதன் - (இல.6, வில்வந்துரு வீதி, அரியாலை), ராஜேந்திரா கொனெஸ்ரூபன் - (இல.32, செல்லர் லேன், நல்லூர்), மகேந்திரன் பாபு - (இல. 697, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்.) சிவதாஸ் றெஜினோ ரூபராஜ் - (இல. 310,பருத்தித்துறை வீதி, நல்லூர்), சின்னையா பரமநாதன் - (கொம்பனி வீதி, அரியாலை), லலிதா சண்முகநாதன் -(இல. 25, புரூடி வீதி, அரியாலை)

கந்தசாமி ரஜிதன் - (இல. 24/2, நக்கா வீதி, சுண்டுக்குழி, யாழ்.), மாணிக்கம் கந்தையா (அம்பன் வீதி, குடத்தனை), சந்திரசேகரம் யோகேஸ்வரன் - (கைதடி கிழக்கு), தர்மலிங்கம் கருணாகரன் - (நாவற்குழி மேற்கு), ஜே.குகநேசன் - (இல. 20, சிவபுரம் வீதி, யாழ்.) (க-7-9)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்30

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் பிரதேசமட்ட சூழல் பாதுகாப்புக் குழுவைத் தெரிவு செய்வதற்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெறும்.

(உ-16)

## நிறை குறைந்து பிறக்கும் குழந்தைகள்

வவுனியா,ஜூன்30

கடந்த 1998ஆம் ஆண்டு தொடக்கம் இந்த ஆண்டு மே மாதம் வரையும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஆயிரத்து 296 குழந்தைகள் நிறைகுறைந்து பிறந்துள்ளதாக அங்குள்ள புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. பொருளாதாரத் தடையின் காரணமாகவே குழந்தைகள் நிறை குறைந்து இவ்வாறு பிறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

# இந்திய மீனவர்களை விடுவிக்க துரித நடவடிக்கை எடுங்கள்!

## இந்துப் பேரவை டக்ளஸுக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஜூன்30

யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலைசெய்ய துரித நடவடிக்கை எடுக்குமாறு கோரி வடபிராந்திய இந்துப் பேரவையினர் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தவிடம். மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சரியான எல்லைகள் புலப்படாத காரணத்தினால் வழிதடுமாறிய இந்த மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்துள்ளனர்.

இவ்வாறு நுழைந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டது மட்டுமன்றி சிறைச்சாலையில் ஏனைய கிரிமினல் குற்றவாளிகள் போல தடுத்து வைக்கப்பட்டிருப்பது மனிதாபிமான முறையில் எமக்கு ஆழ்ந்த வேதனையை அளிக்கின்றது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் ஏழைகள், ஊமைகள், வயோதிபர்கள், இளைஞர்கள் எனப் பலரும் அடங்குகின்றனர். எனவே இத்தகைய அப்பாவிகளான ஏழை மீனவர்களின் விடுதலைக்கு உதவ வேண்டும் - என்று அதில் உள்ளது.

(க-7)

**புலமைப் பரிசில் - 2001**

*பரீட்சை 40 இல் பரிசுக்குரியவர்கள்*

| | | |
|---|---|---|
| சி. கீர்த்திகா | - | 162 |
| சு. மைவிழி | - | 160 |
| ந. வேணுசரன் | - | 159 |
| ஏ. கஜலக்ஷி | - | 158 |
| ஈ. கஜேந்திரா | - | 154 |

*அடுத்த பரீட்சை நாளை ஞாயிறு 8.30 மணி*

தரம் 1முதல் O/L வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**நாவலர்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(89602)

## முகாமையாளர் இடமாற்றத்தை ஆட்சேபித்து

# பருத்தித்துறை டிப்போ ஊழியர் வேலை நிறுத்தத்திற்கு முஸ்தீபு

தென்மராட்சி,ஜூன்30

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் எஸ்.எஸ்.மகாதேவனின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரி அந்த டிப்போ ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்க முஸ்தீபு செய்து வருகின்றனர்.

முகாமையாளர் மகாதேவனுக்கு திடீரென தலைமையகமான கோண்டாவில் டிப்போவுக்கு இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளதை அடுத்து ஊழியர்கள் மத்தியில் சலசலப்பு உருவாகியுள்ளது.

இந்த இடமாற்றத்தை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும் என்று கோரி ஊழியர்கள் மத்திய போக்குவரத்துச்சபை அதிகாரிகள் உட்பட அரசியல் கட்சி முக்கியஸ்தர்களுக்கும் 'பக்ஸ்' மூலம் செய்தி அனுப்பியுள்ளனர்.

இவரின் இடமாற்றம் ரத்துச் செய்யப்படாவிட்டால் எதிர்வரும் 3ஆம் திகதி இவர்கள் வேலைநிறுத்தத்தில் குதிக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

(க-3-117)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூன்30

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம் மாதம் 27ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:

### சங்கானை

(178905ஏ) (181470ஏ) (183228ஏ)
(186774ஏ) (188669ஏ) (189327ஏ)
(189387ஏ) (189433ஏ) (189542ஏ)
(189542பி) (190454ஏ) (190473ஏ)
(190495ஏ) (190506ஏ) (190597ஏ)
(190597பி) (190622ஏ) (190624ஏ)
(190624பி) (190652ஏ) (190658ஏ)
(190658பி) (190681ஏ) (190681பி)
(190705ஏ) (190710ஏ) (191768ஏ)
(191768பி) (191804ஏ) (191804பி)

### யாழ்ப்பாணம்

(171774ஏ) (171774பி) (171774சி)
(171774டி) (171774ஈ) (171774எவ்)
(178160ஏ) (178160பி) (178160சி)
(178160டி) (179927ஏ) (179927பி)
(179927சி) (180043ஏ) (180043பி)
(180043சி) (180086ஏ) (180086பி)
(181889ஏ) (184335ஏ) (184335பி)
(184335சி) (184670ஏ) (184680ஏ)
(184735ஏ) (184735பி) (184735சி)
(184735டி) (185851ஏ) (185851பி)
(185907ஏ) (186205ஏ) (186205பி)
(186205சி) (186205டி) (186243ஏ)
(188821ஏ) (188821பி) (188821சி)
(188822ஏ) (188909ஏ) (188909பி)
(188909சி) (188909டி) (188982ஏ)
(188982பி) (189012ஏ) (189051ஏ)
(189051பி) (189051சி) (189051டி)
(189069ஏ) (189069பி) (189069சி)
(189157ஏ) (189157பி) (189157சி)
(189157டி) (189157ஈ) (189161ஏ)
(189191ஏ) (189209ஏ) (189241ஏ)
(189250ஏ) (189263ஏ) (189263பி)
(189292ஏ) (189292பி) (189292சி)
(189299ஏ) (18963சி) (18963டி)
(189642ஏ) (189642பி) (189642சி)
(190070ஏ) (190070பி) (190757ஏ)
(190762ஏ) (190762பி) (190762சி)
(190775ஏ) (190776ஏ) (190776பி)
(190777ஏ) (190784ஏ) (190784பி)
(190790ஏ) (190791ஏ) (190797ஏ)
(190809ஏ) (190816ஏ) (190816பி)
(190829ஏ) (190829பி) (190835ஏ)
(190843ஏ) (190852ஏ) (190883ஏ)
(190886ஏ) (190894ஏ) (190896ஏ)
(190903ஏ) (190903பி) (190910ஏ)
(190920ஏ) (190926ஏ) (190926பி)
(190927சி) (190927டி) (190927ஈ)
(190927எவ்) (190928ஏ) (190928பி)
(190933ஏ) (190934ஏ) (190934பி)
(190936ஏ) (190936பி) (190939ஏ)
(190942ஏ) (190942பி) (190946ஏ)
(190946பி) (190946சி) (190946டி)
(190950ஏ) (190950பி) (190950சி)
(190953ஏ) (190954ஏ) (190957ஏ)
(190970ஏ) (190970பி) (190973ஏ)
(190973பி) (190979ஏ) (190982ஏ)
(190986ஏ) (190986பி) (190986சி)
(190987ஏ) (190987பி) (190993ஏ)
(190993பி) (190994ஏ) (190994பி)
(190999ஏ) (191001ஏ) (191011ஏ)
(191011பி) (191011சி) (191022ஏ)
(191022பி) (191022சி) (191022டி)
(191022ஈ) (191022எவ்) (191023ஏ)
(191027ஏ) (191042ஏ) (191047ஏ)
(191057ஏ) (191057பி) (191071ஏ)
(191093ஏ) (191093பி) (191148ஏ)
(191151ஏ) (191151பி) (191177ஏ)
(191189ஏ) (191201ஏ) (191202ஏ)
(191207ஏ) (191227ஏ) (191984ஏ)
(191984பி) (193023ஏ) (193023பி)
(193024ஏ) (193045ஏ) (193046ஏ)
(193063ஏ) (193063பி) (193308ஏ)
(193308பி) (193427ஏ) (193427பி)
(193448ஏ) (193479ஏ) (193479பி)
(193479சி) (193479டி) (195176ஏ)
(195176பி) (195176டி) (195207ஏ)
(195218ஏ) (195263ஏ) (195266ஏ)
(195270ஏ) (195284ஏ) (195724ஏ)
(196176சி)

### கோப்பாய்

(185964ஏ) (187263ஏ) (189153ஏ)
(189153பி) (189154ஏ) (189208ஏ)
(189208பி) (190783ஏ) (190783பி)
(190783சி) (190964ஏ)

*(மிகுதி நாளை)*

## நெல்லியடியில் வேட்டு

நெல்லியடி நகரப்பகுதியில் வியாழக்கிழமை நள்ளிரவு நேரம் சுமார் பத்து நிமிடங்கள் வரை தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன.

நெல்லியடியில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகப் பகுதியில் ஆள் நடமாட்டத்தை அவதானித்த பாதுகாப்புக்கடமையில் நின்றவர்களே துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகப் பின்னர் தெரியவந்தது. (க-3-117)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சண்முகநாதன்

நல்லூர் சந்தை இராஜவீதியைப் பிறப்பிடமாகக்கொண்ட பிரபல வர்த்தகரும் தேங்காய் எண்ணெய் மில் உரிமையாளருமான வேலுப்பிள்ளை சண்முகநாதன் (அருளம்பலம்) 26.06.2001 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா ஆகியோரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான குட்டிப்பிள்ளை அன்னமுத்து ஆகியோரின் மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் கிட்ணர்(முன்னாள் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் - ஆஸ்திரேலியா), கந்தசாமி, புவனேஸ்வரி(கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆனந்தராஜா(கொழும்பு), ஆனந்தகுமார்(வர்த்தகர்), சித்திரா(கொலண்ட்), சுபத்திரா,ஆனந்தநாதன்(சுவிஸ்), சந்திரா, அருணா(கொலண்ட்), சுகுணா(விவசாய ஆராய்ச்சி நிலையம்), மஞ்சுளா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி (கொலண்ட்), வைத்தியநாதன் (நடனமுருகன் மெடிக்கல்), சுதன்(டோகா), விக்னேஸ்வரன்(கொலண்ட்), கிரிதரன்(லண்டன்), இந்திரா(கொழும்பு), இராஜேஸ்வரி, சுகந்தி(சுவிஸ்), ஆகியோரின் மாமனாரும் கவிதா (கொலண்ட்), தர்சன்(கொலண்ட்), நிரோசன்(கொலண்ட்), மீரா, தயாபரன், அகிலன், கஜன், விசாகன், கீர்த்தனா, விதூசன், வாகீசன்(பரியோவான் கல்லூரி), துவாரகன், அஜந்தா(சுவிஸ்), சுயந்தா(சுவிஸ்), கவின் (லண்டன்), வைசாலி(லண்டன்) ஆகியோரின் ஆசைப் பேரனும், கீர்த்திகா, லதுமிலன் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக இன்று(30.06.2001) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் (பழையநேரம்) செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*32, இராஜவீதி,*
*நல்லூர்.* (89604)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் நேபாளத்தில் பெரும் நிலச்சரிவு அறுபதுக்கும் மேற்பட்டோர் பலி!

## ஒரு கிராமம் முற்றாக அழிந்தது

காத்மண்டு,ஜூன்30

நேபாளத்தில், தலைநகர் காத்மண்டுவுக்கு வடமேற்கே உள்ள கிராமம் ஒன்றில் ஏற்பட்ட நிலச்சரிவில் 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தாடிங் மாவட்டத்தில் தொடர்ந்து கடும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக பத்திதேவ் கிராமத்தில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த நிலச்சரிவினால் முழுக் கிராமமுமே அழிந்துவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கிராமம் முழுவதும் ஒரே வெள்ளக்காடாகக் காட்சி அளிக்கின்றது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60க்கும் மேல் என உள்ளூர்ப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. எனினும் 36 பேரே உயிரிழந்துள்ளதாக அரச அதிகாரிகள் கூறுகின்றனர். கிராமத்தில் இருந்து இதுவரை 36 பேரின் சடலங்களே மீட்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மீட்புப் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன. கிராமத்தில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்பான வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அதேநேரம் -

மாவட்டத்தில் வெள்ள அபாயம் ஏற்படக்கூடிய பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்களை அதிகாரிகள் இடம்மாற்றி வருகின்றனர்.

நிலச்சரிவினால் பலர் உயிரிழந்துள்ளதால் நாடு முழுவதும் சோகத்தில் ஆழ்ந்துள்ளதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

அண்மையில் நேபாள மன்னர் பிரேந்திரா உட்பட அவரது குடும்பத்தினரும் உறவினர்களும் இளவரசர் திபேந்திராவால் சுட்டுக்கொல்லப்பட்டதன் சோகத்திலிருந்து மக்கள் முழுமையாக மீளாத நிலையில் அந்த நாட்டை மீண்டும் ஒரு சோகம் தாக்கியுள்ளது என்று செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(ம-10)



பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சாள்ஸ் அவரது காதலி கமிலா பார்க்கர் பவுல்ஸை கன்னத்தில் முத்தமிடுகிறார்.

லண்டனில் நடைபெற்ற நிதி சேகரிப்பு விருந்து ஒன்றில் கலந்துகொள்ள இளவரசர் சாள்ஸ் சென்றபோது அவரை முத்தமிட்டு வரவேற்றார் கமிலா. அதற்கு பதிலாகவே சாள்ஸ் கமிலாவின் கன்னத்தில் முத்தமிட்டார்.

இவர்கள் இருவரும் பகிரங்கமாக கொடுத்துக்கொண்ட முதல் முத்தம் இதுவே.



பாங்கொக்கில் உள்ள சமுட் பார்க்கன் முதலைப் பண்ணையில் கடந்த 26 ஆம் திகதி பிறந்த முதலைக் குட்டிகள் இரண்டு ஒன்றாக ஒட்டிப் பிறந்துள்ளன. பண்ணையின் இயக்குநர் உதன் யங்பார் பக்கோன் ஒட்டிப் பிறந்த முதலைக் குட்டிகளைத் தூக்கி காட்டுவதை படத்தில் காணலாம்.

# ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் குண்டுத் தாக்குதல்

## ஓய்வுபெற்ற ஜெனரல் உட்பட 16 பேர் படுகாயம்

மட்றிட்,ஜூன்30

ஸ்பெயின் தலைநகரான மட்றிட்டின் மத்திய பகுதியில் நேற்றுமுன்தினம் பெரும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற ஜெனரல் ஒருவர் உட்பட 16 பேர் இந்தக் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்துள்ளனர். ஜெனரலின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈ.ரி.ஏ. (ETA) தீவிரவாதிகளுக்கு எதிராகத் தீவிரமாகப் பணியாற்றிய ஓய்வு பெற்றவரான ஜெனரல் ஜுஸ்டோ ஒரிஜா பெட்ஸாவை (வயது 63) இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

உலக அரங்கில்

உள்ளூர் நேரப்படி நேற்றுமுந்தினம் காலை சனநெருக்கடி மிகுந்த லோபஸ் டி கொயாஸ் வீதியில் உள் வங்கிக் கட்டடம் ஒன்றுக்கு முன்பாகவே இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது.

வங்கிக் கட்டடத்துக்கு முன்பாக பார்சலில் வைக்கப்பட்டிருந்த குண்டு 'ரிமோட் கொன்றோல்' மூலம் இயக்கி வெடிக்க வைக்கப்பட்டுள்ளதாகப் பொலீஸார் கூறுகின்றனர். வங்கிக்கு அருகிலேயே ஜெனரலின் வீடும் அமைந்திருந்ததால் அவரது வீடு மிக மோசமாகச் சேதமடைந்ததுடன் அவரும் படுகாயங்களுக்கு உள்ளானார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குண்டுத் தாக்குதலை ஈ.ரி.ஏ. தீவிரவாதிகளே மேற்கொண்டதாகப் பொலீஸார் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஸ்பெயினின் வடபகுதியிலும் பிரான்ஸின் தென்மேற்குப் பகுதியிலும் தமக்கு சுதந்திரப் பிராந்தியம் கேட்டு ஈ.ரி.ஏ. போராடி வருகின்றது. கடந்த 33 வருடகாலமாகத் தொடர்ந்து வரும் இந்தப் போராட்டத்தில்



குண்டுவெடிப்பால் தகர்ந்து போயுள்ள வங்கிக் கட்டடம்

இதுவரை 800 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அண்மைககாலமாக ஈ.ரி.ஏ. தீவிரவாதிகள் இராணுவ அதிகாரிகளை இலக்கு வைத்துத் தமது தாக்குதல்களை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இஸ்ரேல் – பலஸ்தீனம் இடையே மத்திய கிழக்கில் புதிய உடன்பாடு

ஜெருசலேம்,ஜூன்30

மத்திய கிழக்கில் பலஸ்தீனர்களின் இணக்கத்தோடு ஒருவாரகால மோதல் தவிர்ப்பு நாள்களைக் கடைப்பிடிக்க இஸ்ரேல் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனுக்கும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மத்திய கிழக்கில் சமாதானத்தை நிலைநாட்டுவது தொடர்பாக கொலின பவல் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத் தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

இதேவேளை -

யுத்தநிறுத்தத்தைக் கைவிட்டு பலஸ்தீனர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலதுசாரிகள் இஸ்ரேல் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். ஆனாலும் பலஸ்தீனர்களுடன் யுத்தநிறுத்தத்துக்கு இணங்குவதாக ஏரியல் ஷெரோன் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்தக் காலப் பகுதியில் தமது போராளிகளைக் கைது செய்யக் கூடாது என பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் கோரியுள்ளார்.

அதேசமயம் -

மேற்குக் கரையில் புதிதாக வெடித்த வன்செயல்களில் இஸ்ரேலியர் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் காயமடைந்தார். (ம-10)

# யூகோ. முன்னாள் அதிபர் மிலோசெவிக் சர்வதேச நீதிமன்றத்திடம் ஒப்படைப்பு

பெல்கிரேட்,ஜூன்30

யுத்த மரபு நெறிகளை மீறினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் யூகோஸ்லாவியாவின் முன்னாள் ஜனாதிபதி ஸ்லோபொடோன் மிலோசெவிக்கை சேர்பியா சர்வதேச நீதிமன்றத்திடம் ஒப்படைத்தது.

மிலோசெவிக்கை சர்வதேச நீதிமன்றிடம் ஒப்படைக்கக்கூடாது என்று சேர்பிய நீதிமன்றம் முன்னதாக தெரிவித்திருந்தது. எனினும் அதனை நிராகரித்த சேர்பிய அரசு மிலோசெவிக்கை சர்வதேச நீதிமன்றத்திடம் ஒப்படைத்தது.

பல வருடங்களாக நடைபெற்ற பால்கன் யுத்தத்தின் போது மிலோசெவிக் யுத்த மரபுகளை மீறினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

மிலோசெவிக்கை சர்வதேச நீதிமன்றத்திடம் ஒப்படைக்கவேண்டும் என அமெரிக்கா உட்பட பல நாடுகள் சேர்பியாவுக்கு அழுத்தம் கொடுத்து வந்தன. ஆனாலும், உள்ளூர் சட்டப்பிரச்சினைகள் காரணமாக எவ்வித முடிவுகளும் மேற்கொள்ள முடியவில்லை.


மிலோசெவிக்கை சர்வதேச நீதிமன்றிடம் ஒப்படைப்பதற்கு சேர்பிய அரசு முன்வந்ததை சர்வதேச மன்னிப்புச் சபை ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் உட்பட பல நாடுகளின் தலைவர்கள் பாராட்டினர்.

மிலோசெவிக் சர்வதேச நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட இச்சம்பவம் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் அரசியல்வாதிகளுக்குப் பாடமாக அமையும், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் இப்படிக் கூறினார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கும் போது, ஒரு காலத்தில் பால்கனில் முக்கிய இடம் வகித்த மிலோசெவிக் இன்று சர்வதேச நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரிவித்தார்.

மிலோசெவிக்கை சர்வதேச நீதிமன்றிடம் ஒப்படைத்தது யூகோஸ்லாவியாவிற்கு கிடைத்த இராஜதந்திர வெற்றி என அரசியல் அவதானிகள் கூறினார்கள்.

ஒரு நாட்டின் முன்னாள் தலைவர் ஒருவர் சர்வதேச நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது இதுவே முதல் தடவை.



மியான்மரில் பிரிவினைகோரிப் போராடிவரும் கரேன் தேசிய விடுதலை இராணுவத்தில் இணைந்துள்ள இளைஞர்களுக்கு யுத்தநெறிகள் குறித்து வகுப்பு நடத்தப்படுவதைப் படத்தில் காணலாம்.

கரேன் தேசிய விடுதலை இராணுவத்துக்கு 15 வயது இரட்டைச் சகோதரர்களே தலைமை வகிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருவரும் கடவுளின் அவதாரங்கள் என்று அப்பகுதி மக்கள் நம்புகிறார்கள்.

## சோமாலிய சிறுவருக்கு போஷாக்கு குறைபாடு

நியூயோர்க்,ஜூன்30

கென்யாவில் உள்ள சோமாலிய அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள ஒரு லட்சத்து 20 ஆயிரம் சிறுவர்கள் போஷாக்குக் குறைபாடுகளால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக 'யுனெஸ்கோ' அமைப்புத் தெரிவித்துள்ளது.

## பெருவில் பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு

பெருவில் கடந்த வாரம் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 116 ஆக உயர்ந்துள்ளது. இந்த அனர்த்தத்தால் 73,400 பேர் வீடுகளை இழந்துள்ளனர். 21,000 வீடுகள் தொடர்ந்து வசிக்க இயலாத வகையில் பாரிய சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. 53 பேர் தொடர்பான விவரங்கள் இன்னமும் தெரியவில்லை. (ம)

# ஜப்பான் – அமெரிக்க தலைவர்கள் பேச்சு

டோக்கியோ,ஜூன்30

ஜப்பானியப் பிரதமர் கொய்சுமி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை சந்தித்துப் பேசினார்.

ஏவுகணைத் தடுப்புத் திட்டம், பொருளாதாரம், குற்றத்தடுப்பு முதலான விடயங்கள் பற்றி இப்பேச்சுக்களில் ஆராயப்பட்டன. அமெரிக்கா உடனான உறவுகளைப் பலப்படுத்திக்கொள்வதே ஜப்பானியப் பிரதமரின் முக்கிய நோக்கம் என அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவுடன் இணைந்து ஜப்பான் ஏவுகணைத் தடுப்புத் திட்டம் பற்றி கூட்டறிக்கை விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறான ஓர் அறிக்கை வெளியிடப்படுமாயின் அது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் ஏவுகணைத் தடுப்புத் திட்டத்திற்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

# கியூபச் சிறுவன் எலியன் நாடு திரும்பிய ஒருவருடம்

ஹவானா,ஜூன்30

கியூபச் சிறுவன் எலியன் கொன்ஸாலிஸ் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பி ஒருவருடம் பூர்த்தியாகிறது.

எலியன் மனோவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவான் என வைத்தியர்கள் கூறினார்கள். ஆனால் அவ்வாறான எந்த ஒரு பிரச்சினையும் இல்லாமல் அவன் இருக்கிறான். எலியனின் தந்தை இப்படிக் கூறினார்.

இந்தச் சிறுவன் அமெரிக்காவில் தஞ்சம் புகுவதற்காக தன் தாயுடன் படகில் சென்றான். கடலில் படகு கவிழ்ந்தபோது எலியன் மட்டும் மீனவர்களால் காப்பாற்றப்பட்டான். பின்பு அவனை புளொரிடா அதிகாரிகளிடம் மீனவர்கள் ஒப்படைத்தனர்.

எலியனை மீண்டும் தாய்நாட்டிற்கு வரவழைக்க கியூபா ஏழு மாதங்களாக செயற்பட்டது.

இச்சிறுவன் கியூப அரசியலின் ஓர் அடையாளமாக விளங்குகிறான் என மக்கள் தெரிவித்தனர். (ம)

# மீன்பிடியியல் டிப்ளோமா பயிற்சிக்கு ஆள் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். பல்கலைக்கழகத்தின் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சையில் பழைய பாடத்திட்டத்தில் ஒரே தடவையில் 180 புள்ளிகள் பெற்றுப் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுடைய மாணவர்கள் அனைவரும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

புதிய பாடத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற பரீட்சையில் 3 பாடங்களில் 135 புள்ளிகளுக்கு மேல் எடுத்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை ஜூலை மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பு 'இணைப்பாளர், கடல்வள அபிவிருத்தி நிலையம், யாழ். பல்கலைக்கழகம்' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான கற்கை நெறி செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

(ஐ-10)

## பெற்றோல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

இரண்டு வாரங்களுக்குப் பின்பு யாழ். நகரின் மையப் பகுதியில் உள்ள 'மாக்பெட்' எரிபொருள் விற்பனை நிலையத்தில் தற்போது பெற்றோல் விநியோகம் நடைபெற்று வருகிறது.

இரண்டு நாள்களாகத் தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் விநியோகம் நடைபெற்று வருவதை அடுத்து வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்று பெற்றோலை நிரப்பிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை நகரப்பகுதியில் உள்ள ஏனைய எரிபொருள் விற்பனை நிலையங்களில் இன்னும் பெற்றோல் விநியோகம் ஆரம்பமாகவில்லை. (உ-10)

## தாமதமாக கிடைத்த டயறிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். மாநகர சபையின் உறுப்பினர்களுக்கு இவ்வருடத்துக்கான நாட்குறிப்பேடுகள் (டயறி) ஆறுமாதங்களுக்குப் பின்னரே வழங்கப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன.

மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் இந்த நாட்குறிப்பேடுகள் இவ்வாறு காலதாமதமாக வழங்கப்பட்டது குறித்து சகல உறுப்பினர்களும் அதிருப்தி தெரிவித்தனர். (ம-5)

## மேற்பார்வையாளர் நியமனம்

வடமராட்சி ஜூன் 30

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மூத்த ஆண் பரிசாரகர்களாகக் கடமையாற்றிய மூவர் மேற்பார்வையாளர்களாக மாகாண சுகாதார அமைச்சினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

எம். செக்கியல், கே. பாலசுப்பிரமணியம், எஸ். இராமச்சந்திரன் ஆகியோரே பதவி உயர்வு பெற்றவர்களாவர்.

இவர்களில் முதல் இருவரும் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையிலும் மற்றையவர் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையிலும் மேற்பார்வையாளர்களாக இம் மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-173)

## எழுத்துப் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சமூகக் கல்விப் பாடப் பொது அறிவுப் போட்டியின் எழுத்துப் பரீட்சை அடுத்த மாதம் ஏழாம் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், இணுவில் மத்திய கல்லூரியிலும் நடத்தப்படவுள்ளது.

போட்டியில் பங்கு பற்றும் மாணவர்கள் அன்றைய தினம் காலை 9-30 மணிக்கு அருகில் உள்ள நிலையத்திற்குச் செல்லுமாறு வலயக் கல்விகுப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஐ-117)

## ஆங்கிலப் படிப்பு வட்ட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். ஆங்கிலப் படிப்பு வட்டத்தின் 7 ஆவது மாதாந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அண்மையில் காலமான இந்திய நாவலாசிரியர் ஆர். கே. நாராயணணின் ஞாபகார்த்தமாக இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

'ஆர்.கே. நாராயண் ஒரு புதிய இந்தியக் காவிய சிருஷ்டி?' (R K. Narayan, — A new Indian Myth Maker?) என்னும் தலைப்பில் இடம்பெறவுள்ள நாளைய கருத்தங்கில்—

'ஆர். கே. நாராயண் ஒரு சமூக சீர்திருந்த வாதி' என்ற தலைப்பில் அருட்திரு.ஜே.ஈ. ஜெயசீலனும்—

'ஒரு சிறந்த இந்திய நாவலாசிரியர்' என்னும் தலைப்பில் கலாநிதி ஆர்.முருகையனும்—

'ஆர். கே. என். சுயவரலாற்று ஆய்வு' என்னும் தலைப்பில் திருமதி வி. யோகரட்ணமும் உரையாற்றுவர்.

(ஐ)

## ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள்

வலிகாமம் தெற்கு, ஜூன் 30

உலக வங்கியின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்தில் ஆசிரியர் தொடருறு கல்வித்திட்டத்தின் கீழ் தொடர் கருத்தரங்குகள் தற்போது மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய நிலையத்தில் நடைபெற்று வருகின்றன.

இத்தொடரில் இன்று சனிக்கிழமை தமிழ் அறிவை விருத்திசெய்தல் தொடர்பான கருத்தரங்கும்—

நாளை ஞாயிற்றுக்கிழமை தமிழ் கற்பித்தலுக்கான கற்பித்தல் உபகரணம் தயாரித்தல் தொடர்பான கருத்தரங்கும்—

அடுத்த நாள் திங்கட்கிழமை சமூகக்கல்விப்பாடம் கற்பித்தலுக்கான உபகரண ஆக்கம் தொடர்பான கருத்தரங்கும் — நடைபெற உள்ளன.

ஆசிரியர் தொடருறு கருத்தரங்குக்குப் பொறுப்பாக உள்ள உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராசா, மேற்படி கருத்தரங்குகளுக்கு இடைநிலை வகுப்புகளில் இப்பாடங்களைக் கற்பிக்கும் பொருத்தமான ஆசிரியரைத் தவறாது அனுப்பிவைக்கும்படி பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

(உ-152)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 30

தொல்புரம் பத்தானையம்பதி ஸ்ரீ ஆதிஞான வைரவ சுவாமி ஆலயத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து மாகேஸ்வர பூசையும் இடம்பெறும். விசேட நிகழ்ச்சியாக 'அருள் மழை பொழியும் ஆதி ஞானவைரவ சுவாமி' எனும் தலைப்பில் பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தியின் கதாப்பிரசங்கமும் நடைபெறவுள்ளது. (ஐ)

★ ★ ★

தொல்புரம் மேற்கு மன்னதோட்டம் ஜெகஜோதி அம்பாள் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிறு காலை 6 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

கொழும்புத்துறை செபமாலை ஆலயத்தின் மடுமாதா திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு இடம்பெறும்.

ஆயத்தநாள் வழிபாடுகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும்.

இதேவேளை —

ஆலயத்தின் மடுமாதா திருவிழாவைக் கொண்டாடும் முன்னேற்பாடாக ஆலய சுற்றாடல் பகுதியை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்றுள்ளன. (ஐ-17)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன் புனித இராயப்பர் ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணிக்கு இளவாலை மறைக்கோட்ட முதல்வர் . அருட் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

மேற்படி ஆலயத்தின் நவநாள் திருப்பலிகள் கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருவதாகப் பங்குத்தந்தை அருட்திரு க. அருள்நேசன் தெரிவித்தார். (க-6)

## கூட்டுறவாளர் கௌரவிப்பு

வலி. வடக்கு, ஜூன் 30

தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தினால் கூட்டுறவுப் பெரியார்கள், சங்கக் கூட்டுறவாளர்கள் மற்றும் சங்கக் கூட்டுறவுப் பணியாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

சங்கத் தலைவர் ச. தனபாலசிங்கம் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்க விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினர்களாக யாழ். மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமகாராசா, யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், வலி. வடக்கு பிரதேச செயலாளர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் ஆகியோரும்—

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வர்த்தகத்துறைத் தலைவர் க. தேவராஜன், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைச் செயலாளர் சு. சிவசுப்பிரமணியம், வயாவிளான் மகா வித்தியாலய அதிபர் ஆ. சி. நடராசா, கூட்டுறவு தொழிற்சங்கப் பிரதிநிதிகளான து. சிவகுமார், ந. பாலகணேசன், சிக்கன கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி நா. சபேஷ்குமார் ஆகியோரும்— கலந்துகொள்ளவுள்ளனர். (உ-86)

# உதயனில் பிரசுரமான கட்டுரை: மாநகர சபையில் கண்டனம்

யாழ்ப்பாணம் ஜூன் 30

''வீதிகள், குளங்களின் சாதிப் பெயர்களில் தமிழ் மக்களின் சரித்திரம் பொதிந்துள்ளது'' — என்ற தலைப்பில் உதயனில் வெளியிடப்பட்ட கட்டுரை ஒன்றில் அரசியல் கட்சிகளை அவமதிக்கும் விதத்தில கருத்துக்கள் வெளியிடப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து யாழ். மாநகரசபை தனது வன்மையானகண்டனத்தைத்தெரிவித்துள்ளது.

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்றது.

'உதயன்' பத்திரிகையில் கடந்த 27 ஆம் திகதி பிரசுரமான மேற்படி கட்டுரையில் ''சாதி என்பது அரசியல் கட்சியுள்தான் இருக்கிறது. அரசியல் கட்சிகள்இல்லாது ஆணையாளர் வெறும் மாதச் சம்பளத்துடன் மக்களுக்கு எல்லாச் சேவையையும் செய்துவந்தார் என்பதை மறுக்கமுடியாது'' என்ற வரிகள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொச்சைப்படுத்துவதாக இருக்கிறது. இதற்கு யாழ். மாநகர சபை தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது — என்று இது தொடர்பாக நேற்று மாநகர சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களின் விவரம் வருமாறு:-

★ பல இடங்களிலும் தொடர்ந்து நடைபெறும் தமிழ் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களை யாழ். மாநகர சபை வன்மையாகக் கண்டிக்கிறது.

பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுக்கு எதிராக அவ்வப்போது கண்டனங்கள் எழுப்பப்பட்டபோதும் அது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதுடன் மாத்திரம் நின்று விடாது சம்பவத்தில் ஈடுபடுபவர்களின் மன நிலையை மாற்றும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ யாழ். பஸ் நிலையப் பகுதியில் மின்சார நிலைய வீதிப்பக்கத்தில் போடப்பட்டுள்ள முள்கம்பி வேலிகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும். (உ-5)

## வழக்கு தள்ளுபடி

யாழ்ப்பாணம், ஜூன் 30

வீட்டுப் பணிப்பெண்ணின் கையை முறித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு ஆசிரியை ஒருவருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு போதிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

கடந்த வருடம் ஜனவரி மாதம் திருநெல்வேலிப் பகுதியிலுள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டில் பணிப்பெண்ணாக இருந்த— பராயமடையாத— பெண் ஒருவரைத் தாக்கி அவரது கையை முறித்ததாக ஆசிரியை ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

கடந்த ஒன்றரை வருடகாலமாக யாழ். நீதிமன்றில் நடைபெறும் இவ்வழக்கு நேற்று முன்தினம் நீதிவான் இ. த. விக்னராஜா முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இவ்வழக்கினை விசாரணை செய்த நீதிவான் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தினாலும் சாட்சியான வீட்டுப் பணிப்பெண் முன்னுக்குப் பின் முரணாக சாட்சியமளித்தமையாலும் வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

வழக்கைத்தள்ளுபடி செய்த நீதிவான், குறிப்பிட்ட வீட்டுப் பணிப்பெண் ஆசிரியை வீட்டில் இரண்டு வருடங்களாக வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தமையால் அவரது பெயரில் நன்கொடையாக 15 ஆயிரம் ரூபாவை தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிட வேண்டும் என்று உத்தரவிட்டார். (உ-5-10)

## தொடர்புகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 30

சாவகச்சேரி மறவன்புலோ பாசைவாடி வீதியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவனேஸ்வரி என்பவரைத் தமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகம் கேட்டுள்ளது.

(உ-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பாடசாலைகளிடையேயான —15, 17 வயதுப் பிரிவினர்களிடையேயான—கிரிக்கட் சுற்றுப் போட்டிகளில் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**

★ கொக்குவில்இந்து. எதிர் யாழ், இந்து- (கொக்குவில் இந்து மைதானம்.)

★ பருத்தித்துறை ஹாட்லிக். எதிர் கந்தரோடை ஸ்கந்தா- (ஹாட்லி மைதானம்).

★ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் சென்ஜோன்ஸ்(யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்).

**17 வயதுப் பிரிவு**

★ யாழ். மத்திய கல்லூரி எதிர் அரியாலை கனகரெத்தினம் ம. ம. வி. (யாழ். மத்திய கல்லூரி மைதானம்).

★ சென்ஜோன்ஸ் எதிர் மானிப்பாய் இந்து (சென் ஜோன்ஸ் மைதானம்).

(உ-86)

★ ★ ★

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் லாலா சோப் நிறுவனத்தினரின் அனுசரணையுடன் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று சனிக்கிழமை சமரபாகு நியூட்டன் விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் வி.கவும் பாஷையூர் சென். அன்ரனீஸ் வி. கவும் மோதும்.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் வி.கவும் அல்வாய் மனோகரா வி.கவும் மோதவிருக்கின்றன (உ-3)

★ ★ ★

'எவரெடி' வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றில் —

யாழ். உதைபந்தாட்ட லீக் அணியும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்அணியும் பற்குபற்றும் ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் சி. இராஜதுரை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார் (ஐ)

உதயன்

# நல்ல பாடம்

"நிதிப் பற்றாக்குறையினால் யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது."

- இவ்வாறு யாழ்.மாநகர சபைக் கூட்டத்தில் அறிவித்திருக்கின்றார் யாழ்.மாநகர முதல்வர் என்.ரவிராஜ்.

இந்த ஆண்டில் முதல் ஆறு மாத காலம் பூர்த்தியாகிவிட்டது. இற்றைவரை மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் ஆக ஐந்து லட்சம் ரூபா நிதியே மாநகர சபைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடமும் மாகாண ஆளுநரிடமும் யாழ்.மாநகர சபை 6 கோடி 60 லட்சம் ரூபாவுக்கு மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்தும் ஆறு மாதமாகிவிட்டது. 'றான்' அமைப்பும் எந்தவிதமான நிதியையும் யாழ்.மாநகர சபைக்கு ஒதுக்கவில்லை. யாழ்.நவீனசந்தைக் கட்டட வேலையைப் பூர்த்தி செய்ய இன்னும் 90 லட்சம் ரூபா வழங்கப்பட வேண்டியிருக்கின்றது.

இப்படியாக வடக்கு மக்களின் மிகப்பெரும் உள்ளூராட்சி அமைப்பான யாழ்.மாநகர சபையை மாற்றாந் தாய் மனப்பான்மையோடு புறக்கணிக்கின்றது அரசு.

யாழ்.மாநகர சபை தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகத்தில் உள்ளது.

ஆனால் அரசாங்கத்தின் அணியில் இருக்கும் ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கோ தனியான கவனிப்பு.

வாகன வசதி விடயத்திலாகட்டும் - நிதி ஒதுக்கீட்டு விடயத்திலாகட்டும் - இந்த உள்ளூராட்சி சபைகளுக்குத் தாராள மனப்பான்மையுடன் கவனிப்பு; நிதிக்குவிப்பு.

'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைப்பது' போன்று, அரசுக்கு வால்பிடிக்கும் அணியில் இருக்கின்ற உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் எம்.பிக்களும் அமைச்சரும் ஏதோ தனது 'பொக்கட்'டிலிருந்து கோயில், குளம், குட்டைக்கு எல்லாம் பணத்தை அள்ளி வீசுவது போல பீற்றிக்கொள்வதும் விளம்பரப்படுத்துவதும் -

அரசின் தரப்பில் இல்லாத தமிழ்க் கட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளை அடியோடு ஒதுக்குவதும் -

தமிழ் மக்களுக்கு நல்லதோர் பாடத்தைப் படிப்பிக்கத் தவறவில்லை.

உள்ளூராட்சி அமைப்பு என்பது அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான ஓர் அடிப்படை அலகு.

இந்த கீழ்மட்ட அலகில் பெற்றுக்கொண்ட அதிகாரங்களைக் கூட செயற்படுத்துவதாயின், ஆட்சியில் இருக்கும் சிங்கள அரசின் காலடியில் கிடந்து, வாலை ஆட்டித்தான் ஆக வேண்டும். இல்லையேல் உள்ளூராட்சியும் கூட வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான் என்பதுதான் அந்தப் பாடம்.

உள்ளூராட்சி விடயத்தில் இப்படியென்றால், இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு கண்டு, அதிகாரத்தைப் பரவலாக்கினால் கூட, பகிரப்பட்ட அந்த அதிகாரத்தைச் செயற்படுத்துவதற்குக் கூட, ஆளும் சிங்கள அரசாங்கத்தின் காலில் தமிழர்கள் மண்டியிட்டுத்தான் ஆக வேண்டியிருக்கும் என்ற இந்தப் பாடம் புரிகின்றதல்லவா?

தெரிந்தோ, தெரியாமலோ இந்தப் பாடத்தைத் தமிழர்கள் புரிந்து கொள்வதற்கு வசதியாக முன்னுதாரணங்களை ஏற்படுத்தி - காவடி தூக்கித் திரியும் - அரசியல்வாதிகள் பாராட்டுக்குரியவர்கள்.

அதிகாரப் பகிர்வு மூலமான தீர்வைப் பெற்றாலும் அதைச் செயற்படுத்துவதற்கு ஜால்ரா போடும் அடிமைப் பண்பைத்தான் நாம் பேணவேண்டியிருக்கும் என்பதை நமது மக்கள் நேரில் உணர்ந்து கொள்வதற்கு வசதியாக இந்த அரசியல்வாதிகள் நேரில் 'மொடல்' ஆக இருக்கின்றார்கள் அல்லவா? அதற்காக அவர்களுக்கு நன்றி சொல்வோம்.

# ஆடு நனைகிறதென்று ஓநாய்.....

"1990இல் தொடங்கி இன்றுவரை தொடரும் மருந்துகள், ஒட்சிசன் சிலிண்டர்கள், உபகரணங்களுக்கான தட்டுப்பாட்டுடன் 1996இன் பின் மோசமாகியுள்ள சகல ஊழியர்களுக்குமான பற்றாக்குறையுமே இந்த இக்கட்டான நிலைக்குக் காரணமாகும்....

"யாழ்ப்பாணத்தில் வைத்திய நிபுணர்களுக்கான 90 வீத வெற்றிடங்களும் ஏனைய வைத்திய அதிகாரிகளுக்கான 60 வீத வெற்றிடங்களும் இருந்து வருவதுடன் நிலைமை மேலும் மோசமடையும் வாய்ப்புகளே உள்ளன. ஏனெனில் கடந்த சில வருடங்களாக அரசாங்கம் யாழில் உள்ள வைத்திய அதிகாரிகளின் வெற்றிடங்களைத் திட்டமிட்டு நிரப்பாது தவிர்த்து வருகின்றது....

"பாதுகாப்பு அமைச்சு கோரப்பட்ட மருந்துகளின் அளவுகளில் வெட்டிக் குறைப்புகளைச் செய்து காலதாமதத்தின் பின்பே அனுமதி தருகிறது.....

"அவசர உயிர் காப்பு மருந்துகளோ ஒட்சிசன் சிலிண்டர்களோ முடிந்து விட்டாலும் கூட அவசரமாக அவற்றைத் தருவிக்க முடியாதவாறு மேற்படி நடைமுறைகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன.

"வைத்தியசாலைகளுக்குத் தேவையான அவசியமான மருந்துகளைக் கூட விமானத்தில் கொண்டுவர முடியாதுள்ளது. 'கெற்றமின்' எனும் மயக்க மருந்து கடந்த பத்து வருடங்களாக இந்த வைத்தியசாலைக்கு அனுப்பப்படவில்லை.

"ஒட்சிசன் சிலிண்டர், முறிவுகளுக்குப் போடப்படும் சுண்ணாம்பு பற்று (P.O.P) போன்றவை பல வேளைகளில் இங்கு உரிய நேரத்துக்குக் கிடைப்பதில்லை. ஒட்சிசன் சிலிண்டர் இல்லாமையினால் சிலவேளைகளில் இங்கு நோயாளிகள் இறக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது....."

– இவைகள் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.கிளை உறுப்பினர்கள் நடத்திய செய்தியாளர் மாநாட்டில், தமது வேலைநிறுத்தம் தொடர்பாக விளக்கமளிக்கையில் தெரிவித்த கருத்துக்களில் சில, (ஆதாரம்: இம்மாத 12ஆம், 13ஆம் திகதிய '*உதயன்*') இதனை எழுதியதும் மேற்படி வேலைநிறுத்தம் கைவிடப்பட்ட செய்தி கிடைத்துவிட்டது. அதனாலென்ன, இருக்கவே இருக்கிறது. லேடி ரீட்ஜ்வே...... தொடர்ந்து படியுங்கள்.

"இலங்கையில் இருக்கின்ற சிறுவர் ஆஸ்பத்திரிகளில் மிகப்பெரியது லேடி ரீட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைதான். இங்கு நாள் ஒன்றுக்கு 500 சிறுவர்கள் தங்கியிருந்தும் 2000 சிறுவர்கள் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவிலும் சிகிச்சை பெறுகின்றனர்.

"இங்கு சகல வசதிகளும் இருக்கின்றன. எல்லா நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கக் கூடிய வார்ட்டுகள் இருக்கின்றன. இப்படியான பெரிய வைத்தியசாலையை நிர்வகிக்க ஒரேயொரு பணிப்பாளர்தான் கடமை புரிகிறார்.

"இரு வருடங்களாக பிரதிப் பணிப்பாளர் பதவி நிரப்பப்படாதுள்ளது. இப்பதவி வெற்றிடத்தை நிரப்பும்படி கோரியே இந்த வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம்."




இவை கொழும்பு லேடி ரீட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை மருத்துவ அதிகாரிகளின் வேலைநிறுத்தம் தொடர்பாகச் சங்கத்தின் செயலாளர் டாக்டர் அனுருத்த பாலகனிய செய்தியாளர் மாநாட்டிலே தெரிவித்த கருத் துக்கள். (ஆதாரம்: இம்மாத 19ஆம் திகதிய '*தினகரன்*') இதனை எழுதிக் கொண்டிருக்கையில் இவ் வேலைநிறுத்தமும் கைவிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதனாலென்ன, எனக்கு வேண்டியது அவர்களது அறிக்கைதானே....!

வைத்தியர்களின் வேலைநிறுத்தங்களைப் பற்றி நான் அபிப்பிராயம் கூறவரவில்லை. அதற்கான தகுதியும் எனக்கில்லை. வேறு ஒரு வார்த்தை சொல்லுவார்களே.... ஆம், அதுதான்... அவர்களின் போராட்டங்களை 'கொச்சைப்படுத்'தவும் நான் விரும்பவில்லை. நான் குறிப்பிடுவது, சத்தியமாகச் சொல்லுகிறேன் இரண்டாவது செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்து பற்றித்தான்.... அதாவது லேடி ரீட்ஜ்வே... அந்த அறிக்கையிலே தெரிந்தோ தெரியாமலோ 'நோயாளர்களது நலனில் அக்கறை உள்ளது போலவும் அவர்களுக்காகக் கவலைப்படுவது போலவும்'' தெரிவித்திருப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை.

நோயாளிகளைப் பற்றிக் கவலைப்படுவதாக இருந்தால் வேலை நிறுதத்தைப் பற்றி நினைக்கமுடியாது. 'கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை' 'வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தப் போகிறவர்கள்' நோயாளர்களை – அதுதான் லேடி ரீட்ஜ்வே சிறுவர் நோயாளிகளை நினைத்துக் கவலைப்பட்டு டென்சனாகித் தங்கள் உடலையும் உள்ளத்தையும் வருத்திக் கொள்ளக்கூடாது. அவர்கள் (அதுதான் லேடி ரீட்ஜ்வே....) என்னாலும் சரியென்று விட்டுவிட வேண்டும் என்பதுதான் எனது கருத்து (!) வேண்டுமானால் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்களுக்கு மனம் வருந்தும் அளவோடு மட்டும் அவர்கள் நிறுத்திவிட வேண்டும்.

லேடி ரீட்ஜ்வே மருத்துவ அதிகாரிகளின் வேலைநிறுத்தம் வெற்றி பெற்று அவர்களது கோரிக்கைகள் நிறைவேற வேண்டும். அதேவேளை மீண்டும் சொல்லுகிறேன். அதுவரை அவர்கள் நோயாளிகளுக்காக (ஐயோ பாவம்...... அதுவும் சிறுவர்களாயிற்றே....) என்று கவலைப்படக்கூடாது. அப்படிக் கவலைப்பட்டால் அந்த 'அழுத கதை'யை மக்கள் அவர்களுக்கு நினைவூட்டிவிடுவார்கள்.

அதென்ன கதை....? கீழே பார்க்காதீர்கள்..... மேலே பாருங்கள்....

**சண் அங்கிள்.**

# அமைச்சர் யாப்பா ஐ.தே.கவுக்கு சவால்

கொழும்பு,ஜூன்30

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக ரெலோ அமைப்புடன் எந்தவித உடன்படிக்கையும் செய்யவில்லை என்று ஐ.தே.க. நிரூபிக்க வேண்டும் என்று ஊடகத் தகவல்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா சவால் விடுத்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், ரூபவாஹினியும், ரெலோ அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறியவற்றை பதிவு செய்த ஒலி, ஒளி நாடாக்களை வைத்திருப்பதாகவும்-

அதில் ஐ.தே.கவுக்கும் தமக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக செல்வம் அடைக்கலநாதன் கூறியிருப்பதாகவும் -

அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தூண்டுதலின் பேரிலேயே ஐ.தே.க. நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளது என்றும் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா குற்றஞ்சாட்டினார். (ஒ)

## நாளை

ஆனி 17
ஞாயிற்றுக்கிழமை
திதி: ஏகாதசி
முன்னிரவு 8.07 வரை.
நட்சத்திரம் : சுவாதி
காலை 6.09 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 8.56 - 10.26
ராகுகாலம் : 4.26 - 5.56
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

மன மகிழ்ச்சிக்கும், நட்புக்கும் அன்பே. திறவுகோல்.

# நாட்டு நடப்பு

## ரியூட்டறி - II

காலையில் முதுகில் மூட்டை
கட்டியே கழுதை போன்று
மாலை ரியூசனால் வந்து தானே
மாட்டிறான் கழட்டி வீட்டில்
எட்டிலே படிக்க முன்பே
எலும்பெல்லாம் கோலிப்போச்சு
இட்டம் போல் இவன் நிமிர்ந்து
இனி நடப்பதும் எந்த நாளோ?

*- விகடகவி -*

# மாணவிகளைத் தாக்கியதாக இரு அதிபர்கள் மீது வழக்கு

தென்மராட்சி,ஜூன்30

வடமராட்சிப் பகுதியில் உள்ள இரு பாடசாலைகளின் மாணவிகள் இருவர் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களின் தாக்குதல்களுக்கு இலக்காகியதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றன.

கடந்த மாதம் மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாவின் போது கடற்கரையில் வைத்து வியாபாரி மூலைப் பகுதி பாடசாலை ஒன்றின் நான்காம் ஆண்டு மாணவி அதிபரினால் தாக்கப்பட்டது தொடர்பான விசாரணையில் அதிபரை ஆயிரத்து 500 ரூபா ரொக்கப்பிணையிலும், 10 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்த நீதிவான் விசாரணையை ஒகஸ்ட் 13ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கடந்த 14ஆம் திகதி வல்வைப் பகுதி பாடசாலை ஒன்றின் ஒன்பதாம் ஆண்டு மாணவி ஒருத்தி வகுப்பறையில் வைத்து அதிபரினால் தாக்கப்பட்டது தொடர்பான விசாரணையில் -

வகுப்பறையில் மாணவிகள் சத்தமிட்டதைக் கண்டிக்கும் பொருட்டு மாணவியைத் தாக்கியதாகவும், மாணவியைத் திட்டமிட்டுத் தாக்கவில்லை எனவும் அதிபர் கூறினார்.

"பாடசாலைகளில் மாணவர்களின் ஒழுக்கத்தை ஆசிரியர் குழாமும் பெற்றோர் - ஆசிரியர் சங்கமும் நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் ஏனைய பாடசாலைகளில் இடம் பெறாதவாறு பாதுகாக்க வேண்டும்" என்று குறிப்பிட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் கல்லூரி அதிபரைப் பிணையில் விடுவித்ததுடன் வல்வை முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு அறக்கொடை நிதியாக ரூபா 250ஐச செலுத்திப் பற்றுச்சீட்டை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கூறி இரு பகுதியினரையும் இணங்கிப்போக அனுமதித்தார்.

இதேவேளை தாக்குதலுக்கு உள்ளாகிய மாணவி வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் நான்கு நாள்கள் சிகிச்சைபெற்ற போதிலும் சம்பவம் குறித்து பொலீஸாருக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி அறிவிக்காதது குறித்து நீதிவான் விசனம் தெரிவித்தார். (உ-117)

# கோப்பாய்ப் பிரதேசத்தில் அடிக்கடி மின்தடை!

## சுழற்சிமுறை விநியோகம் சீர்குலைவு

கோப்பாய்,ஜூன்30


கோபபாய்ப் பிரதேசம் உள்ளிட்ட நல்லூர் வடக்கு மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக இரவு நேரத்தில் வழங்கப்படும் சுழற்சி முறையிலான மின்விநியோகம் சீர்குலைந்துள்ளது. கடந்த செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்றுதினங்களும் தொடர்ந்து இரவு மின்தடை ஏற்பட்டது.

மின்சாரம் மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படும் முன்னிரவு நேரம மின்தடை ஏற்பட்டு வருவதால் பெரும எண்ணிக்கையான மின் பாவனையாளர்களை உள்ளடக்கிய இப் பிரதேச மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

கடந்த புதனன்று முழுநேர மின் தடை ஏற்பட்டதால் கோப்பாய் சுற்றயல் கூறு மருத்துவமனை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகிய இடங்களில் குளிரூட்டிகள் மூலம் பேணிப் பாதுகாக்கப்படும் அத்தியாவசிய மருந்து வகைகள் பழுதடையும் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து அங்கிருந்த மருந்து வகைகள் பிராந்திய நிலையங்களுக்கு அவசரமாக இடம்மாற்றப்பட்டன.

கோப்பாய்ப் பிரதேசத்தில் சட்ட விரோத மின் பாவனை அதிகரித்து வருவதாலேயே மின்பாவனைப் பளு அதிகரித்து மின்தடை ஏற்படுவதாக மின்சார சபை வட்டாரங்கள் கூறுகின்றன. (ஐ-72)

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



யுத்த வெடிப்பொருள் எங்கெங்கு காண்கினும்
அங்கெல்லாம் விலகி இருத்தல் அறிவு!

# தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவாளர்

## திரு. சின்னத்தம்பி சிவமகாராசா (பா.உ.) அவர்களின்

# சேவைநலன் பாராட்டுவிழாச் சிறப்பிதழ்

**1968ஆம் ஆண்டுமுதல் இற்றைவரை கூட்டுறவுத் துறையில் அரும்பெரும் சேவையாற்றியமையைப் பாராட்டு முகமாக இன்று (30-06-2001) சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்குச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு.ச.தனபாலசிங்கம் அவர்களின் தலைமையில் மேற்படி விழா நடைபெறவுள்ளது. இவ்விழாவில் கூட்டுறவுத் தீபம் எனும் சிறப்புமலரும் வெளியிடப்படவுள்ளது.**

## ஆதீன முதல்வரின் ஆசி

தெல்லிப்பழை மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய பிரதேச மக்களுக்கும் கைகொடுத்து உதவுவதில் நிறைவுகாணும் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நல்லதொரு தலைமைத்துவத்தைக் கொண்டதன் காரணமாகத் திறமையாகச் சேவையாற்றுகின்றது. இப்பணிக்காகத் தன்னை அர்ப்பணித்துச் சேவை செய்யும் திரு.சிவமகாராசா எல்லோருடனும் அன்பாகப் பழகும் சுபாவம் கொண்டவர். இனிமையான பேச்சு, சீரான உடை, எடுத்த கடமையை நிறைவாகச் செய்வதில் மனநிறைவு கொண்டவர். இவரது 25 வருடகால சேவை பலரது துயர்களைத் துடைக்கக் கூடியதாக இருந்தது.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்த ஆதீனம்.

## மக்களுக்காக வாழ்பவர்

திருவாளர் சிவமகாராசா அவர்கள் தன் வாழ்வை தான் பிறந்த பிரதேசத்தின் மக்களுக்காகவே அர்ப்பணித்து வாழ்வது யாவரும் அறிந்ததே. கூட்டுறவுத்துறையில் அவர் செய்த சாதனைகள் பல. அகில இலங்கையிலுமே தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்னணியில் திகழச்செய்த பெருமை ஒன்றே அதற்குச் சான்றாகப் போதுமானது.

சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்
கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா.

## கொள்கைப் பற்றாளன்

திரு.சி.சிவமகாராசா கொள்கைப்பிடிப்பும் மனவுறுதியும் சேவை மனப்பான்மையும் கொண்டவர். தந்தை செல்வாவின் அரும் நினைவை பக்தி சிரத்தையுடன் காப்பாற்றி வருகின்றவர்.

இன்று தெல்லிப்பழை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மண் வளமும், நீர்வளமும், கல்வி வளமும், பண்பாட்டு வளமும் ஓங்கிய தெல்லிப்பழையின் இன்றைய நிலை வேதனையளிப்பதாகும். இதனை மீட்டெடுத்து தெல்லிப்பழையின் பண்டைய பெருமையைக் காப்பாற்றுவது திரு.சிவமகாராசா போன்ற நாட்டுப்பற்றாளனின் கடமையாகும். திரு.சிவமகாராசா நீடூழி வாழ்ந்து கூட்டுறவுத்துறைக்கும், தெல்லிப்பழைக்கும், தமிழ் மக்களுக்கும் சீரிய தொண்டாற்ற வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன்.

அருட்கலாநிதி எஸ்.ஜெபநேசன்
தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர்.

## தூரநோக்குடன் பணிபுரிபவர்

சிவமகாராசா அவர்கள் நாடறிந்த சிறந்த தலைமைத்துவம் படைத்த கூட்டுறவாளர். தூய்மையான, எளிமையான வாழ்வு வாழ்பவர். மக்கள் சேவையே தன் இலட்சியம் எனக் கொண்டு அயராது உழைத்து வருபவர்.

சொல்லொணாத் தடைகளும், துன்பதுயரங்களும் நிறைந்த போர்க்காலச் சூழ்நிலையிலும் இந்த மண்ணை விட்டகலாது, அஞ்சாது நின்று மக்கள் சேவை செய்து வருபவர்.

கூட்டுறவின் உண்மைத் தத்துவத்தை நன்கு உணர்ந்து அமைதியான, ஆழமான, தூரநோக்குடன் பணிசெய்து வருகின்றார். அண்மையில் நாடாளுமன்றத்தில் அவர் 'கூட்டுறவு மறுசீரமைக்கப்பட வேண்டிய அவசியம்' பற்றி ஆற்றிய உரை அவருடைய ஆளுமையை எல்லோரும் அறிய வைத்துள்ளது.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர்

## செல்வா வழி நடப்பவர்

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாகக் கூட்டுறவுச் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கூட்டுறவுக்காக உழைத்தவர் திரு.சிவமகாராசா அவர்கள். எந்தவொரு தன்னலமும் கருதாது மக்களின் சேவையே மகேசனின் சேவையெனப் பணியாற்றினார். திரு.சிவமகாராசா அவர்கள் இரண்டு முறை நாடாளுமன்றத்திற்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்டார். மறைந்த தந்தை செல்வா அவர்களின் வழியில் நடப்பதையே தான் கொண்ட கொள்கையாக இருந்தார். அவர் எங்கு சென்றாலும் மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்.

க.சண்முகநாதன்
யாழ். அரசாங்க அதிபர்.



## விழா நாயகரின் சமூக சேவைக் குறிப்புகள்

- 1938.06.28இல் திரு.சின்னத்தம்பி சுந்தரம் தம்பதியரின் மகனாகப் பிறந்தார்.
- 1960பதுகளில் மாவிட்டபுரம் கி.மு.சங்கம், மாவை கொல்லங் கலட்டி ச.ச.நிலையம், மாவை கொல்லங்கலட்டி அருண் நெறிக் கழகம் என்பவற்றில் செயலாளர், அமைப்பாளர் பதவிகளில் சேவை செய்தார்.
- 1968 முதல் 1998 வரை தெல்லிப்பழை கிராமச்சங்கத்தில் உத்தியோகம்.
- 1968இல் மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத் தலைவராகக் கூட்டுறவுத்துறையில் பிரவேசித்துப் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு பதவிகளை வகித்தும் சிறப்பாக 18 ஆண்டுகளாகத் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தின் தலைமைப் பதவியை வகித்தும் சங்கத்தை முன்னணிச் சங்கமாகத் திகழவைத்தார்.
  வலிகாமம் வடக்கு கால் நடைவளர்ப்போர் சங்கத் தலைவராயும், வலிகாமம் வடக்கு செஞ்சிலுவைச் சங்கத் தலைவராயும் இருந்து பெரும்பணியாற்றினார்.
  யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை, விளைபொருள் உற்பத்தி கூ.சங்க சமாசம் என்பவற்றின் தலைவராயும், ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை, ஸ்ரீலங்கா சந்தைப்படுத்தல் சம்மேளன சபை என்பவற்றின் பணிப்பாளராயும் சேவை செய்தார்.
  வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவராயும், தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைத் தலைவராயும் பணிபுரிந்தார்.
  வலி.வடக்குப் புனர்வாழ்வுக் கழகம், வலி. வடக்குப் பிரசைகள் குழு என்பவற்றின் செயலாளராகவும் தலைவராகவும் சேவை செய்தார்.
- 1989இலும் 2000த்திலும் நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில்களில் யாழ்.மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுத் தற்போதும் சேவை செய்கின்றார்.

திரு.ச.தனபாலசிங்கம்,
தலைவர், தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்.

## மக்கள் சேவையாளன்

சி.சிவமகாராசா அவர்கள் கூட்டுறவுத்துறையில் மிக நீண்ட காலமாகத் தன்னை ஈடுபடுத்தி அதன் மூலமாக மக்கள் பணியாற்றியவர். இவரது தலைமையின்கீழ் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 'கூட்டுறவுக்கோர் அறிமுகம்' என்ற நூலினை வெளியிட்டதன் மூலம் கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிப் போக்கில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. திரு.சி.சிவமகாராசா அவர்களின் மக்கள் சேவை அவரை நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ஸ்தானத்திற்கு உயர்த்தியுள்ளமை அவரின் பொதுசன அணுகு முறையின் வெற்றி என்றே கொள்ளவேண்டும். அவரின் மக்கள் சேவை தொடர எமது நல்லாசிகள் பல.

செ.கு.சண்முகநாதன்
யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

## தர்மங்களால் உயர்ந்தவர்

சிவமகாராசா அவர்கள் 'உச்சிமீது வானிடிந்து வீழ்ந்திடினும் அச்சமில்லை அச்சமேயில்லை' என்ற தாரக மந்திரத்தை ஏற்றுப் பிறந்த மண்ணிலேயேநின்று உடன் பிறப்புகளோடு இணைந்து, உடல், பொருள், ஆவி அத்தனையாலும் அல்லல்பட்டோரது இடர்களை ஓரளவிற்குத் தன்னாலான தொண்டுகளால் களைந்து காலத்தால் ஆற்றிய தர்மங்களால் சிவமகாராசா உயர்வு பெறுகிறார்.

மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்
மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் ஆதீனகர்த்தா.

## தன்னலங்கருதாத் தியாகி

உண்மையான உழைப்பினாலும், உறுதியான சொல்வன்மையினாலும், தன்னலங்கருதாத் தியாக சிந்தையினாலும், மக்கள் மனதில் உறுதியான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர் பெரியார் சிவமகாராசா அவர்கள். ஆரம்பத்தில் தந்தை செல்வா அவர்களின் அறநெறிப்பாதை இவருக்கு வழிகாட்டியாக அமைந்ததெனலாம். அடுத்து சொல்லின் செல்வரும், செயல்வீரருமாகிய அமரர் அமிர்தலிங்கத்தின் வழிகாட்டல் இப்பெரியாரை இந் நிலைக்கு உயர்த்தி விட்டதெனலாம். தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தில் கால்நூற்றாண்டுக்கு மேலாகக் கண்ணியமாகக் கடமை புரிந்தவர் இப் பெரியார்.

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி.

## கலங்கரை விளக்கு

'சேவை செய்வதே மேலான இன்பம்' என்னும் இலட்சியத் துடிப்புடன் இலங்குகின்ற உத்தம புருஷர்களில் திரு.சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களும் ஒருவராவார். இவரை வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் 'கலங்கரை விளக்கு' என்று குறிப்பிடுவதுதான் சாலவும் பொருத்தமானது ஆகும்.

இவர் நல்ல உடல், உள நலத்துடன் நீடூழி காலம் எம்மத்தியில் வாழ்ந்து, தன்னலமற்ற உன்னத சேவையைத் தொடர்ந்தும் இப்பிரதேச வாசிகளுக்கு ஆற்றி அகமகிழ்ந்திட நான் இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.

அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
இளவாலை மறைமாவட்டக் குருமுதல்வர்.

## கூட்டுறவின் வழிகாட்டி

இலங்கையில் கூட்டுறவுத்துறை, யாழ்ப்பாணத்திலேயே எடுத்துக்காட்டாக வளர்ந்து, உயர்ந்து விளங்கியது வரலாறாகும்.

அந்த வரலாற்றுச் சுவடுகளின் அடியொற்றித் தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கமும் ஈடுகொடுத்து மக்களுக்கு, அதுவும் போர்ச் சூழலில் அல்லற்பட்டு ஆற்றாது தவித்த நம் தமிழ் மக்களுக்கு ஆறுதலளித்து வாழ்வளித்ததென்றால் அது பாராட்டுக்குரியது தான். இத்தகைய பாராட்டுக்குரிய கூட்டுறவுச் சங்கத்தை வழிநடத்துவதில் பெரும்பங்களித்த திரு.சிவமகாராசா அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

மாவை சேனாதிராசா
தமிழர் விடுதலைக் கூட்டணி
நாடாளுமன்ற உறுப்பினர்

## சிறந்த பண்பாளன்

அமைதியான போக்கும், சிறந்த பண்பும் கொண்ட இவர் கூட்டுறவு ஊழியர்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்றவர். அவரது செல்வாக்கு தெல்லிப்பழைக் கிராமத்தோடு மட்டுமல்லாது யாழ்.குடாநாடு முழுவதும் பரவியிருந்ததையும் நான் நன்கு அறிவேன்.


தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினராக இன்று அவர் செயற்பட்டாலும் கூட்டுறவாளர்களின் பிரதிநிதியாகவே நான் அவரைக் காண்கின்றேன். தற்போது வகிக்கும் பதவி காரணமாக அவர் தனது தலைமைப் பதவியைத் துறந்தாலும் கூட்டுறவுத்துறைக்கு அவரது தொண்டு தொடர்ந்திருக்கும் என்றும் எமது பூரண ஒத்துழைப்பு அவருக்கு என்றைக்கும் உண்டு என்றும் கூறி அவர் பல்லாண்டு வாழ்ந்து, பல தொண்டு செய்ய நீண்ட ஆயுளைக் கொடுக்க இறைவனை வேண்டுகிறேன்.

வி.ஆனந்தசங்கரி
நாடாளுமன்ற உறுப்பினர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி
சிரேஷ்ட துணைத் தலைவர்

# தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
# கூட்டுறவாளர் பாராட்டுவிழாச் சிறப்பிதழ்
## 01-07-2001

கூட்டுறவுத்துறையில் 25 ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றிய கூட்டுறவுப் பெரியார்களையும் சங்கக் கூட்டுறவாளர்களையும், சங்கப் பணியாளர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் விழா (01-07-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு.ச.தபைாலசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

## பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படும் கூட்டுறவுப் பெரியார்கள்



பண்டிதர். க. நாகலிங்கம், அளவெட்டி. | திரு. க. இ. குமாரசாமி (J.P.), கோப்பாய். | திரு. வி. கே. சுப்பிரமணியம், உடுப்பிட்டி. | திரு. ஆர். எம். நாகலிங்கம் (J.P.), மாவிட்டபுரம்.

## விருது வழங்கிக் கௌரவிக்கப்படும் சங்கக் கூட்டுறவாளர்கள்



திரு. வ. மயில்வாகனம், தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை. | திரு. நா. சக்திவேல், 'வசந்தகிரி' தெல்லிப்பழை. | திரு. ந. நடராசா, நீலாவத்தை, தெல்லிப்பழை. | திரு. சு. ஜெயரத்தினம், கருகம்பனை, காங்கேசன்துறை. | திருமதி ஜ. வேதநாயகி, இளவாலை வடக்கு, இளவாலை. | திரு. மு. தம்பித்துரை, கீரிமலை, காங்கேசன்துறை. | திரு. நா. நடராசா, தம்பகத் தம்பி வீதி, மாவிட்டபுரம். | திரு. சு. பூதப்பிள்ளை, கொக்கன், காங்கேசன்துறை. | திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை.



திரு. பொ. கணேசமூர்த்தி, பூம்புகார், காங்கேசன்துறை. | திரு. வ. வைரவப்பிள்ளை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. | திரு. க. முருகேசு, சாயுடை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. | திரு. நா. போஜன், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை | திரு. வே. சந்திரன், வறுத்தலைவிளான், தெல்லிப்பழை. | திரு. மு. இராசசிங்கம், கட்டுவன், தெல்லிப்பழை. | திரு. சி. சுப்பிரமணியம், வசாவிளான் தெற்கு, வசாவிளான். | திரு. ச. சிவசுப்பிரமணியம், வசாவிளான் தெற்கு, வசாவிளான். | திரு. வே. செல்லத்துரை, வண்ணான் சீமா, காங்கேசன்துறை.



திரு. இ. வேலாயுதபிள்ளை, பலாலி, காங்கேசன்துறை. | திரு. க. சதாசிவம், பலாலி, காங்கேசன்துறை. | திரு. செ. சின்னத்துரை, பலாலி கிழக்கு, காங்கேசன்துறை. | திரு. இ. இரத்தினசிங்கம், பலாலி கிழக்கு, காங்கேசன்துறை. | திரு. சி. ஆறுமுகம், பலாலி கிழக்கு, காங்கேசன்துறை. | திரு. இ. வல்லிபுரம், தையிட்டி தெற்கு, காங்கேசன்துறை. | திரு. ம. மரியாம்பிள்ளை, ஊரணி, காங்கேசன்துறை.

திரு. த. மாலானர், தையிட்டி ஊரணி, காங்கேசன்துறை. | திரு. மு. முத்துலிங்கம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. | திரு. சி. கதிரவேல், மாவிட்டபுரம், தெல்லிப்பழை | திரு. நா. மார்க்கண்டு, வசந்தபுரம், இளவாலை. | திரு. சி. கதிரவேல், கோணாவளை, வசாவிளான். | திரு. கோ. குருதேவன், வீமன்காமம், தெல்லிப்பழை. | திரு. க. கேதாரசிங்கம், வசாவிளான். | திரு. நா. சிவராசலிங்கம், வீமன்காமம் வடக்கு. | திரு. க. மகாலிங்கம், வசாவிளான்.

## தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்படும் சங்கப் பணியாளர்கள்



திரு. ஆ. சண்முகநாதன், மயிலிட்டி. | திரு. சி. நாகேந்திரன், இளவாலை. | திரு. வ. கந்தசாமி, சித்தியம்பரியடி. | திரு. வ. துரைராசலிங்கம், வீமன்காமம். | திரு. இ. சிவலிங்கம், ஊரங்குனை. | திரு. க. துரைசிங்கம், கொல்லங்கலட்டி. | திரு. ச. திருஞானசம்பந்தர், பன்னாலை. | திரு. தி. சிவசுந்தரன், இளவாலை.



திரு. சி. சிவப்பிரகாசம், பன்னாலை. | திருமதி அ. ஜெயந்திராவதி, கருகம்பனை. | திரு. பா. புலேந்திரன், காங்கேசன்துறை. | திரு. ந. கிருஷ்ணமூர்த்தி, பன்னாலை. | திரு. சி. தேவதாசன், ஒட்டகப்புலம். | திருமதி சி. செல்வரத்தினம், தெல்லிப்பழை. | திரு. வே. செல்வராசா, கீரிமலை. | திரு. சி. சிவஞானம், கருகம்பனை.

(89478)

# அறிவித்தல்

FULL GOSPEL CRUSADE SOUND OF SALVATION

வடபகுதியில் இயங்கிவரும் இரட்சிப்பின் சத்தம் சபையின் 6ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாளை (01-07-2001) ஞாயிற்றுக்கிழமை, இலக்கம் 136, புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள எமது சபையில் விசேஷித்த நன்றித்துதி ஆராதனை (அனைத்துக் கிளைச் சபைகள் உட்பட) நடைபெறும். அன்றையதினம் அருட்திரு. G.J. கிளரண்டன் அவர்கள் விசேஷித்த தேவ செய்தியை வழங்குவார். திருப்பந்தி ஆராதனையுடன் யாவும் முடிவடையும். சிறப்பு நிகழ்வாக நெல்லியடி இராஜகிராமம் என்ற இடத்தில் 02-07-2001 திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்குப் புதிதாக அமைக்கப்பட்ட சபையும் அருட்திரு. G.J.கிளரண்டன் பிரதிஷ்டை செய்துவைப்பார். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(89557) - சபை நிர்வாகம்

# ஓராண்டு நினைவலைகள்



திருமதி
**கந்தசாமி அன்னலெட்சுமி**

மலர்வு
12 - 04 - 1948

உதிர்வு
10 - 06 -2000

திதி:- பூர்வபக்கத் தசமி
30-06-2001

உயர்வென்னும் பண்பில் தோன்றி
உளமார எம்மைக் காத்து
வளமாக வாழவைத்து
வானகம் சென்று விட்டீர்!
ஓராண்டு சென்றாலும்
ஓயவில்லை உம் நினைவு!
பாராளும் பரமனடி
பணிந்து நின்று போற்றுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,**
**மைத்துனர்மார், மைத்துனிமார்.**

*வட்டாரம் - 5,*
*நயினாதீவு* (89434)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு
15 - 04 - 1935



இறப்பு
31 - 05 - 2001

## அமரர்
## சின்னப்பு சுப்பிரமணியம்

கடந்த 31.05.2001இல் கொழும்பில் இறைபதம் எய்திய எனது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வகைகளிலும் உதவிகள் செய்து அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (30.06.2001) சனிக்கிழமை எனது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எனது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

முகவரி:
*பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,*
*இலந்தைக்காடு,*
*சமரபாகு,*
*வல்வெட்டித்துறை.*

திருமதி சு.பரமேஸ்வரி
(மனைவி)

(89466)

## கோப்பாய் அதிபர்கள் கூட்டம்

கோப்பாய் ஜுன்30

கோப்பாய்க் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார். (ஜ-72)

## தென்மராட்சி அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி, ஜுன்30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வலயக கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

## கலை நிலா அரங்கு

யாழ்ப்பாணம், ஜுன்30

திருமறைக் கலாமன்றத்தின் கலைநிலா அரங்கு இன்று சனிக்கிழமை மாலை 6.15 மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது. (ம-10)

## சாராயம் விலை குறைப்பு

திக்கம் வடிசாலையில், உற்பத்தி செய்யும் சாராய வகைகளின் விலைகள் போத்தலுக்கு பத்து ரூபா விதம் விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளதாக வடிசாலைப் பொது முகாமையாளர் ப.இரவீந்திரன் தெரிவித்தார். (ம-117)


## தபால் மூலம் ஆங்கிலம்

தொழில் புரிவோர், மாணவர்கள் அனைவருக்கும் விரைவாகவும், விளக்கமாகவும் தபால் மூலம் ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது.
சுய விலாசமிடப்பட்ட நீள உறையுடன் விண்ணப்பிக்கவும்.

**ENGLISH DIV**
**79, SHOE ROAD, COLOMBO - 13.** (89525)


## யா/இணுவில் மத்திய கல்லூரி
## நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் - 2001

*தலைவர்:* திரு.துரை எங்கரசு (அதிபர்)
*இடம்:* கல்லூரித் திறந்தவெளி அரங்கு
*காலம்:* இன்று (30.06.2001) சனிக்கிழமை பி.ப. 2.00 மணி
*பிரதம விருந்தினர்:* திரு.கதிரவேலு கேதீஸ்வரன் (பிரதேச செயலர், கோப்பாய் - உடுவில்)
*நினைவுப் பேருரை:* கலாநிதி தாமோதரம்பிள்ளை அமிர்தலிங்கம் (உபஅதிபர் யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி விரிவுரையாளர், கல்வி டிப்ளோமா, தேசிய கல்வி நிறுவனம்)
*சிறப்பு விருந்தினர்:* திரு.அ.தற்பரானந்தன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், உடுவில்)
*பரிசில் வழங்கல்:* திருமதி திருமலர்ராணி கேதீஸ்வரன்
*நன்றியுரை:* திரு.செ.இலகுநாதன் (இணைச் செயலாளர், ப.மா.ச.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்

(89475)


# Sky Computer Systems

sky Computer Systems

**05, De Vos Avenue, Colombo - 04**

**Tel : 075 - 361229, 075 - 371229.**

நம்ப முடியாத விலைகளில்கணனிகள், உதிரிப்பாகங்கள்

'Sky Computer Systems" தனது கணனி சேவையினை மேலும் விரிவுபடுத்துவதற்காக கணனிகளின் விலைகளை மேலும் குறைத்துள்ளது. அதேநேரம் கொள்வலு (Capacity) கூடிய உதிரிப்பாகங்களுடன் தற்போது விற்பனையில்

| | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| 233 MHz Intel / AMD | 51,000 | 49,000 |
| 500 MHz Intel / AMD | 55,500 | 53,500 |
| 600 MHz Intel / AMD | 56,500 | 54,500 |
| 700 MHz Intel | 57,500 | 55,500 |
| 800 MHz Intel Pentium III | 76,750 | 66,750 |

**933 MHz Pentium III -70,500**

**Pentium III 933 MHz**
- Intel 933MHz Pentium III Processor
- Intel Chipset GIGA Byte Motherboard
- 16MB AGP VGA Card
- 128 MB SD Ram
- 30 GB Quantum Hard Disk Drive
- 1.44 MB Floopy Disk Drive
- 14"SVGA Digital Color Monitor (View Sonic)
- Midi Tower ATX Casing
- Mouse With Pad
- Windows 2000 Key Board
- Filter
- Dust Cover

**Multi Media**
52 x Sony CD Rom
32/64 Yamaha Sound Card
600 W Speaker & Head Phone
**7,500**

குறைந்த கட்டணத்துடன் Internet, e-mail Conection பெற்றுத் தரப்படும்.

* UNLIMITED SOFTAWARE OF YOUR CHOICE

இக் கணனிகளில் உங்கள் தேவைக்கு ஏற்றவாறு "உருவமைப்பு" (Configuration) மாற்ற வேண்டினால் மாற்றி அமைத்துக் கொடுக்கப்படும்.

Video Captureing Card (Video Mixing Card), புதிய Software CD, Games CD, Blank CD விற்பனையும் Software Install (New Version) செய்து கொடுக்கப்படும்.

கணனிகள் திருத்திக் கொடுக்கப்படும்....

CD Writer, UPS, Scanner, Printers, Modem, Sub Woofer அனைத்துக்கும்.....

மிகக் குறைந்த விலையில் 80486 கணனிகள் - 28,000 மட்டுமே

விபரங்களுக்கு எமது முகவர்கள்:

**SURIYA VIDEO VISION**
No.14, Parameswara Junction,
Thirunelvely,
T.P. - 2104, 2608

**KYOGARS COMPLEX**
K.K.S. Road, Inuvil.
T.P. - 3573

(89555)

# கூத்துக் கலைஞர்களுக்கு குருபக்தி மிக அவசியம்

"நாட்டுக்கூத்து நடிகர்களுக்கு குருபக்தி மிக அவசியம். நாட்டுக் கூத்துக்களைப் பழக்குவதிலும், பாடல்களைப் படிக்கும் முறைமையைக் கற்பிப்பதிலும் சிறப்புப் பெறும்

**இணுவில் நாகலிங்கன், எம்.ஆர்.கோவிந்தன் ஆகியோருடைய இசை நாடகங்களை நான் பார்த்து ரசித்ததுண்டு. அதே நாடகத்தினை இன்று அண்ணாவியார் பாலதாஸ் நெறிப்படுத்திய "கண்டியரசன்" நாடகம் மூலம் கண்டு பெருமிதம் அடைகின்றேன். இதனை அரங்கேற்றிய பாசையூர் வளர்பிறை நாடகமன்றத்தினர் பெருமைக்குரியவர்களே.**

*எஸ்.சபாபதி* (உறுப்பினர் மாநகரசபை) மட்டக்களப்பு.

ஆசானை - அண்ணாவிமாரை ஒரு போதும் மறக்கக்கூடாது. காரணம் அவர்களின் நல்லாசிகள்தான் எங்களைச் சிறந்த கலைஞர்களாக்குகின்றன.

"எந்தவொரு கலைஞன் தன்னுடைய ஆற்றலைப் பெரிதுபடுத்திக் கூறுகின்றானோ அவன் தனது இறுதிக்காலத்தில் கலையுலகில் இருந்து தூக்கி எறியப்படுவான். இதற்குக் காரணம் அவனது குருபக்தி இன்மையே"

இவ்வாறு வளரும் கலைஞர்களுக்கு ஆலோசனை கூறுகிறார். பாசையூர் அண்ணாவியார் அன்ரனி பாலதாஸ்.

அண்ணாவியார் அ.பாலதாஸ் சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞன; சிறந்த நாட்டுக்கூத்துக் கதாசிரியன்; சிறந்த ஆர்மோனிய வித்துவான்; சிறந்த நாட்டுக்கூத்து அண்ணாவியார்; சிறந்த விளையாட்டு வீரன்.

இவ்வாறு பல்வேறு வகையிலும் சிறப்புப்பெற்ற அண்ணாவியார் பாலதாஸ் 'கலைச்சுடர்' பகுதிக்காக வழங்கிய செவ்வியைத் தொகுத்துத்



**பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக்கழகம் நடத்திய "மூத்த கலைஞர் கௌரவிப்பு" விழாவில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் கிருஷ்ணராஜா அண்ணாவியாருக்கு கிரீடம் அணிவிக்கின்றார்.**

தருகிறோம்.

நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் நெருங்கிவாழும் கலைப்பூமி பாசையூர். கலைக்காகவே தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் கலைஞர்கள் வாழும் பண்பு நிறைந்த அந்த ஊரில் 1940ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி அண்ணாவியார் அன்ரனி பாலதாஸ் பிறந்தார்.

இளமையிலேயே நாட்டுக்கூத்துக் கலையில் ஆர்வம் மிக்கவராக விளங்கிய பாலதாஸ் தனது எட்டு வயதில் கண்டியரசன் நாடகத்தில் குமாரிகாமியின் குழந்தையாகப் பாத்திரம் ஏற்று நடித்தார். இது இவரது கலைப் பிரவேசத்துக்கு உந்துதலாய் அமைந்தது.

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் (சென்.பற்றிக்ஸ்) உயர் கல்வியைத் தொடர்ந்த பாலதாஸ், கல்லூரிக் காலத்தில் சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்ந்ததுடன், அங்கு இடம்பெறும் கலை நிகழ்வு

## அண்ணாவியார் பாலதாஸ் செவ்வி

களிலும் பங்குகொண்டு தனது திறமையை வெளிப்படுத்தினார்.

நாட்டுக்கூத்தில் ஒருமுறை பாத்திரம் ஏற்று நடித்த ஒருவர் மீண்டும் அந்தச் சந்தர்ப்பம் எப்போது தனக்குக் கிட்டும் என எண்ணிக் கொண்டிருப்பார். இன்றைய 'கலைச்சுடர்' நாயகன் அண்ணாவியார் பாலதாஸும் இதற்கு விதிவிலக்கானவரல்லர்.

எட்டு வயதில் ஆரம்பமான கலையாாவம் காரணமாக இவா பாசையூர் அண்ணாவிமார்களான ஞானப்பு மடுத்தீஸ், மடுத்தீஸ் பாவிலுப்பிள்ளை ஆகியோரிடம் நாட்டுக்கூத்து மரபை முறைப்படி கற்றுக்கொண்டார்.

அண்ணாவியார் பாலதாஸ் ஆர்மோனியத்தைச் சரளமாக வாசிக்கும் திறமை மிக்கவர். பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்றும் முக்கிய தினங்களில் இவர் ஆர்மோனியம் வாசிப்பதை நாம் நேரில் காணலாம். அண்ணாவியார் பாலதாஸின் ஆர்மோனியக் குரு மாசிலாமணி மரியாம்பிள்ளை.

"கண்டியரசன் நாடகத்தில் குமாரிகாமியின் குழந்தையாக நான் முதன்முதலில் நடித்த போதே நாட்டுக்கூத்தில் ஆர்மோனியம் வாசிக்கும் மரபு புதிதாகப் புகுந்து கொண்டது. அப்போது ஆர்மோனியம் வாசித்தவர் மாசிலாமணி மரியாம்பிள்ளை. இதற்கு முன்பு நாட்டுக்கூத்துக்களில் மத்தளம், கைத்தாளம் என்பனவே இசைக்கப்பட்டன" எனக் கூறுகின்றார் அண்ணாவியார் பாலதாஸ்.



நாட்டுக்கூத்துக் கலைஞர்
**"இசை நாடக இளங்கோ," "இசைநாடக விற்பன்னன்"**
**அண்ணாவியார் பாலதாஸ்**

அண்ணாவியார் பாலதாஸ் சிறந்த நாட்டுக் கூத்து கதாசிரியனும கூட. இவர் எழுதிய பதின்மூன்று நாட்டுக் கூத்துக்களும் இதற்குச் சான்று.

"நீ ஒரு பாறை', 'வீர தளபதி', 'அனைத்தும் அவரே', 'பத்திரிசியார்', 'கோடி அற்புதர்', 'யூடித்', 'பிலிப்பு நேரியார்', 'தாவீது போலி யாத்', 'ஞானப்பிரகாசியார்', 'தோமஸ் அடிகளார்', 'ஜோசு வாஸ் முனிவர்', 'இடமில்லை', 'சவுல்' என்பனவே அண்ணாவியார் பாலதாஸின் கைவண்ணத்தில் எழுந்த நாட்டுக்கூத்துக்களாகும்.

'நீ ஒரு பாறை' என்ற நாட்டுக் கூத்து அருட்திரு. மரியசேவியர் அடிகளாரின் தூண்டுதலால் எழுதப்பட்டது. இந்தக் கூத்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மேடையேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

13 நாட்டுக்கூத்துக்களிலும் 'வீர தளபதி' என்ற கூத்து மட்டுமே யாழ். திருமறைக் கலாமன்றத்தின் உதவியால் நூலுருப் பெற்றது. ஏனையவை கைப்பிரதிகளாகவே உள்ளன.

பாசையூர் உதயதாரகை நாடக மன்றம், பாசையூர் நடன நல்லிசை நாட்டுக்கூத்து மன்றம், பாசையூர் அருள் நாடக மன்றம் போன்ற மன்றங்கள் மூலம் அண்ணாவியார் பாலதாஸின் கலை ஆர்வம் வெளிப்படுத்தப்பட்டது. இந்த மன்றங்களில் இணைந்துகொண்ட இளம் கலைஞர்கள் பலர் அங்கு அண்ணாவியார் பாலதாஸ் மூலம் நாட்டுக்கூத்துக் கலையைக் கற்றுக்கொண்டனர்.

அண்ணாவியார் பாலதாஸின்

## கலைச்சுடர்

தயாரிப்பு:-நர்த்தகன்

நாட்டுக்கூத்துத் திறனைப் பெரிதும் புரிந்து கொண்டவர்கள் - பெற்றுக் கொண்டவர்கள் - யாழ். திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த கலைஞர்களே. திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் அண்ணாவியார் பாலதாஸின் பயிற்சிக்கூடத்தில் இருந்து வந்தவர்களே. இதனை அடிக்கடி கூறிக்கொள்வார் அண்ணாவியார் பாலதாஸ்.

அண்ணாவியார் பாலதாஸுடன் நாட்டுக் கூத்துக்களில் பங்குகொண்ட சக நடிகர்களில் குருநகர் அண்ணாவியார் பக்கிரி சின்னத்துரை, குருநகர் அண்ணாவியார் எஸ்.ஆர்.சின்னத்துரை, அண்ணாவியார் சாமிநாதர், அண்ணாவியார் இராசாத்தம்பி, அண்ணாவியார் நட்டுவன் செல்லத்துரை, அண்ணாவியார் போயிட்டி மனோகரன், ஈச்சமோட்டை அண்ணாவியார் பூந்தான் யோசேப் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இசைநாடகத்துறையிலும் கைதேர்ந்தவரான 'இசைநாடக இளங்கோ' அண்ணாவியார் பாலதாஸ் 1963 ஆம ஆண்டு நடிகமணி வி.வி.வைரமுத்துவின் தயாரிப்பிலான அரிச்சந்திர மயான காண்டம், ஞான சௌந்தரி ஆகிய இசைநாடகங்களைப் பார்த்தவுடன் தானும் அந்தத்துறையில் பிரவேசித்தால் என்ன என்ற மன நிலைக்கு உள்ளானார்.

இதன் முதற் கட்டமாக 'பத்துக கட்டளைகள்' என்ற இசைநாடகம ராகங்கள் புகுத்தப்பட்டு அவரது நெறிப்படுத்தலில் பாசையூரில் மேடையேற்றப்பட்டது. இந்த நாடகத்துக்கான பாடல்களை மதுரகவி நீக்கோர்சிங்கம் பாடியிருந்தார்.

அரியாலையூர் 'நடிக கலாமணி' இரத்தினத்திடம் இருந்து இசை நாடகங்கத்துக்கான ராகங்களைக் கேட்டறிந்து கொண்ட இவர் 'கண்டியரசன்' என்ற இசை நாடகத்தினை நெறிப்படுத்தி மேடையேற்றினார். இந்த இசை நாடகம் சுமார் ஆயிரத்து ஒரு தடவை மேடையேறி அனைவரதும் பாராட்டைப் பெற்றது.

அண்ணாவியார் பாலதாஸின் நெறிப்படுத்தலில் உருவான இசை நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள அகில இலங்கை ரீதியாகப் பாராட்டைப் பெற்றதும் உண்டு. 1964 ஆம் ஆண்டு இலங்கைக் கலைக கழகம் மட்டக்களப்பில் நடத்திய போட்டியில் இவரது 'கண்டியரசன' இசை நாடகம் முதலாம் இடத்தைப பெற்றது.

பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக்கழகம் நடத்திய நாட்டுக் கூத்துப் போட்டியில் இவரது தயாரிப்பிலான 'முத்தா மாணிக்கமா? என்ற நாட்டுக்கூத்து முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

அண்ணாவியார் பாலதாஸின் நெறிப்படுத்தலில் உருவான 'தீர்கக சுமங்கலி' இசை நாடகம் ஆயிரம் தடவைகளுக்கு மேல் மேடையேறியதுடன் அகில இலங்கைக் கலைக் கழகம் நடத்திய போட்டியில் முதலாவது இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இவ்வாறு இசை நாடகம், நாட்டுக கூத்துத் துறைகளில் சிறந்து விளங்கிய அண்ணாவியார் பாலதாஸ் 1965 ஆம் ஆண்டு கலையரசு சொர்ணலிங்கத்தினால் 'இசை நாடக இளங்கோ' என்ற பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

அரியாலை சனசமூக நிலையத்தினர் 'கண்டியரசன்' நாடகத்தின பெருமையை வியந்து அண்ணாவியார் பாலதாஸுக்கு 'இசை நாடக விற்பன்னன்' என்ற பட்டத்தையும வழங்கிக் கௌரவித்தனர்.

"குடாநாட்டின் இந்து ஆலயங்களில் வருடாந்த மகோற்சவம் நடைபெறும் வேளையில் இரவிரவாக நாடகங்கள், கூத்துக்கள் நடக்கும். அந்த நிகழ்வுகளில் நடிகமணி வி.வி.வைரமுத்துவின் தயாரிப்பான



**பாசக்கயிற்றுடன் யமதர்மராஜனாக "இசை நாடக இளங்கோ" அண்ணாவியார் அ.பாலதாஸ்.**

'அரிச்சந்திர மயான காண்டமும', எனது தயாரிப்பிலான 'கண்டியரசன்' இசை நாடகமும் இடம்பெறுவது வழமையாகும்.

*சந்திப்பு: ஆனந்தன்*

இவ்வாறு பழைய சம்பவங்களை நினைவு கூருகிறார் 'இசை நாடக இளங்கோ' அண்ணாவியார் பாலதாஸ்.

இசை நாடகத்துறையின் வளர்ச்சிக்கு பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகம் ஆற்றிவரும் பங்கு அதிகம் எனக் கூறும் அவர், "நாட்டுக் கூத்தின் ஆட்டநிலை மந்தமடைந்துள்ள இன்றைய நிலையில் அதற்கு கூடிய கவனமெடுத்து மெருகூட்டி, ஆட்டத்தைக் காப்பாற்றி வருபவர் செல்லையா மெற்றாஸ்மயில்" எனவும் குறிப்பிட்டார். ❖

---

# குடிசன மதிப்பீட்டின் மூலம் தமிழர்களின் சரியான தொகை அறிய வாய்ப்பில்லை

கொழும்பு, ஜூன்30

அடுத்த மாதம் மேற்கொள்ளப்படவிருக்கும் குடிசன மதிப்பீட்டின் மூலம் இலங்கையில் தமிழர்களின் திட்டவட்டமான சனத்தொகையை அறிய முடியாமல் போகலாம். ஏனென்றால், நாட்டின் சில பகுதிகளுக்கு மதிப்பீட்டாளர்கள் செல்வதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்கப்போவதில்லை.

குடிசன மதிப்பீட்டுப் பணிப்பாளர் நாயகம் ஏ.ஜி.டபிள்யூ.நாணயக்கார இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

ஜூலை 17இல் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படவிருக்கிறது. 20 வருடங்களின் பின்னர் முதற்றடவையாக இடம்பெறவிருக்கின்ற இந்த மதிப்பீட்டின் போது விடுதலைப் புலிகள் இயங்குகின்ற பகுதிகள் விடுபடக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்று நாணயக்கார கூறியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும மேற்கொள்ளப்படவிருக்கும் குடிசன மதிப்பீட்டுக்கு ஒத்துழைப்புக் கிடைக்காது. சரியான மதிப்பீட்டை செய்வது சாத்தியம் என்று நிச்சயமாகக் கூறமுடியாது. குடிசன மதிப்பீட்டுக்கு அனுமதிக்குமாறு விடுதலைப் புலிகளிடம் வேண்டுகோள் விடுக்குமாறு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்திடம் (யூ.என்.எச்.ஆர்.) அரசாங்கம் கேட்டிருக்கிறது என்றும் நாணயக்கார கூறினார்.

அரசாங்கத்தின் இவ்வறிவிப்பு குறித்து புலிகளிடம் இருந்து உடனடியாக பிரதிபலிப்பு எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை. (ஐ)

---

நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து மக்களுக்கு விளக்க

# ஐ.தே.கவின் எழுச்சிக் கூட்டங்கள் இன்று முதல் நாடு முழுவதும் ஆரம்பம்

கொழும்பு,ஜூன்30

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிககப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக நாடு முழுவதும் எழுச்சிக் கூட்டங்கள இன்று முதல் நடத்தப்படவுள்ளன.

ஐ.தே.கட்சி இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

எழுச்சிக் கூட்டங்கள் இன்று சனிக்கிழமை ஆரம்பித்து ஜூலை மாதம் 15ஆம் திகதி வரை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவிருப்பதாக வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளா மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

'மக்கள் எழுச்சி - 2' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த எதிர்ப்புப் பேரணியின் போது 'அரசே போய்விடு' என்ற கோஷம் வலியுறுத்தப்படவிருப்பதாக ஐ.தே.க. ஊடகப் பேச்சாளர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலாநிதி கருணாசேன கொடித்துவக்குடன் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் 'மக்கள் எழுச்சி' அமைப்பின் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் கள் ஏ.எச்.எம்.அஸ்வர், ஆர்.ஏ.டி. சிறிசேன, ரவீந்திர ரந்தெனிய, அப்துல் மஜீத், சம்சன் சில்பா ஆகியோா கலந்துகொண்டனர். (க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வகுப்புகள்

தமிழ்த் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கிலத் தட்டெழுத்து, புதிய வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு:- 5,அம்மன் வீதி, (வைரவர் கோயில் (முன்பாக) கந்தர்மடம், யாழ்ப்பாணம். (89520)

## O/L கணிதம்

புதிய, பழைய பாடத்திட்டத்தில் **Distinction, Credit** பெறுபேறடைய ஆண்டு 6-10 வரையும் ஆரம்பத்தில் இருந்து (**Paper Class** வரை) கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85,சிவன்கோயிலடி, (சிவன் கோயில் பின்புறம்) திருநெல்வேலி. (89506)

## வேலையாள்கள் தேவை

கோழிகள், பூந்தோட்டம் பராமரிக்க 17 வயதிற்கு மேற்பட்ட ஆளகள (ஆணகள்) தேவை. தங்கியிருக்க வசதியுண்டு. உடன் நேரில்வரவும். தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (89543)

## திருமண சேவை

டாக்டர்கள், பொருளியலாளர், பட்டதாரிகள், கிளாக், பிரஜாவுரிமை பெற்ற வெளிநாட்டு மணமகன்களுக்கும், மலேசியா, சிங்கப்பூரில் பொருளியலாளராகக கடமைபுரியும் மணமகனுக்கும், **B.Sc.** பட்டதாரி மணமகனுக்கும் மணமகள்கள் தேவை. திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு நாள்களில் 10.30 - 4.30 வரை சந்திக்கவும். தொடர்புகளுக்கு: கமலக்கண்ணன் திருமண சேவை, இல.3, மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (89547)

## மணமகள் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 71ஆம் ஆண்டில் பிறந்த சித்திரை முதலாம் பாதம், கன்னி ராசி, 2 இல் செவ்வாய் 34 கிரகபாவம் உள்ள டாக்டர் **M.B.B.S.** மணமகனுக்கு மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1311, மே/பா உதயன். (89428)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ரேவதி நட்சத்திரம், 2ஆம் பாதம் 42 கிரக பாவமுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு யா/இந்து கௌரவ குடும்பத்தில் இருந்து படித்த அழகுள்ள மணமகளை உறவினர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு:- விள.இல. 1315, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (89576)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் கோழி, சூப் குஞ்சுகள குறைந்த விலையில், வேண்டிய நிறையில் தினந்தோறும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (89539)

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. **1K -150/=.** தொடர்பு:- இ.பரதன், வராகி கோயில வீதி, கொக்குவில் மேற்கு. (89563)

புறொயிலர் கோழி (மலிவு விலையில்) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு:- சங்கீத இல.40, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு. (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகாக) (89575)

**BROILER**, கல்பேட்ஸ், சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் தேவையான நிறையில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:-இல.68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (89366)

## விற்பனைக்கு

ஆலய பாவனைக்கு உகந்த (இந்திய தயாரிப்பான) புதிய, பெரிய கோண் ஸ்பீக்கர்கள் விற்பனைக்கு உண்டு தொடர்பு:- ம.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (89553)

**EN** தொடர் இலக்கத்தை உடைய **A-50** கேம்பிரிச் கார் விற்பனைக்கு உண்டு. மோட்டார் சைக்கிள் மாற்ற விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு:- **S.**அன்ரன், அளவெட்டி மேற்கு அல்லது **C.L.S**, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (89469)

ஓடு, பாலைத்தீராந்தி, நிலை கதவு, நிலை யன்னல் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய. விலாசம்: இல.52, வைமன் வீதி, நல்லூர். **T.P NO .3308.** (89560)

நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் **C.D.125 TWIN** மொடல் விற்பனைக்குண்டு. தொடர்பு:- இல.81/1, சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். (89584)

அழகான பெரிய மீன் தொட்டி மீன்களுடன் விற்பனைக்குண்டு. இல. 251, (புதிய இல 131) அம்பிகை அக்கூரியம், அரசடி வீதி, கந்தர்மடம் சந்தி. (89589)

**C.D. 125 TWIN MODEL** மோட்டார் சைக்கிள் (நல்ல நிலையில் உள்ளது) (**TOPPING CONDITION**) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **T.**சண்முகநாதன், 75, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (89591)

**Panasonic NV.SD 235 Am** வீடியோ டெக் (புதியது) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: **T.**ரஞ்ஜித், 81, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.(**T.P. 2215**) (89595)

## தவறிவிட்டது

319, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இசக்கி ஆச்சாரி கிருஷ்ணசாமி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.581731175V), வீசேட அடையாள அட்டை (இல.0902022302) ஆகியவை 17-06-2001 ஞாயிற்றுக்கிழமை யாழ். கே.கே.எஸ். வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும முகவரியில் ஒப்படைத்துதவவும். (89574)

"ஓம்" என்ற பென்ரனுடன் தங்கச் சங்கிலி ஒன்று 27.06.2001 புதனன்று திருநெல்வேலி நாவலடி ஒழுங்கைக்கும் திருநெல்வேலிச் சந்தைக்கும இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் "அண்ணா இல்லம்", நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (89569)

கைக்கடிகாரப் பற்றனுடைய கைச்சங்கிலி ஒன்று 27.06.2001 அன்று கல்வியங்காட்டிலிருந்து நயினா தீவுக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து காவேரி புடவையகம், பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும். (89577)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ 350/-) தொடர்பு:- பாரதி, 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081 (C/16990)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன **Dashound** நாய்க்குட்டிகளும் ஒரு **Alsation** பெண் நாயும் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (89581)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

**Broiler, Cullbirds, Cockerels, Soup chicken** இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர்) (89449)

புறொயிலர், சேவல், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (89582)

இறைச்சிக்கோழி புறொயிலர் வேண்டிய நிறையில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- கிருஷ்ணா, விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய். (89583)

இறைச்சிக் கோழி (**Broiler**) விற்பனைக்குண்டு. விலை **1Kg** ரூ. **150/=** சுத்தம் செய்யப்பட்டது. **1Kg** ரூ**220/=** வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு:- றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. **T.P NO. 3529, 2867.** (89579)

## மரக்கன்றுகள் விற்பனை

நல்ல இன குறோட்டன், றோஸ், தென்னம்பிள்ளை, கமுகு மற்றும் பூக்கன்றுகள், றோசாப்பூ **Concrete** பூச்சாடிகள், மருந்து வகைகள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (89580)

## தேவை

வீடு வாடகைக்குத் தேவை. வண்ணார்பண்ணை, வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடு தேவை. தொடர்புகளுக்கு: செ.துரைரட்ணம், **55/1**, சீனியர் ஒழுங்கை, கலட்டி, வண்ணார்பண்ணை. (89542)

தமிழ் ரைப்றைற்றர் (புதிய அல்லது பாவித்த நல்ல நிலையில் உள்ளது) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்:- கனகராஜா சாந்தினி, காளிகோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய். (89588)

## முன்னிரவில் படையினர் சோதனை

கோப்பாய்,ஜுன்30

கோப்பாய், உரும்பிராய்ப் பகுதிகளில் முன்னிரவு வேளைகளில் வீதிகளில் நடமாடும் பொதுமக்கள் படையினரால் உடற் சோதனைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

ஊரடங்குச் சட்டம் இரவு 10 மணிக்கே அமுலுக்கு வருகின்ற போதும் இப்பகுதிகளில் மக்கள் நடமாட்டம் இரவு எட்டு மணியுடன் அடங்கிப் போய்விடுகிறது. (ஐ-72)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**சிவத்திரு.**
**கனக.பாலசுப்பிரமணிய ஐயா**
(பிரபல முத்துச்சப்பற அமைப்பாளர், அச்சுவேலி, பத்தமேனி, தீர்த்தாங்குளப்பதி)

திதி: இன்று (30.06.2001) பூர்வபக்க தசமி

**அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:**

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*தீர்த்தாங்குளப்பதி, பத்தமேனி, அச்சுவேலி.* (89585)

## FORUT -Jaffna

***Vacancy: Project Co-ordinator, Kayts office***

**A Vacancy exists at our Kayts office for the post of Project Co-ordinator.**

**Major Tasks:**

1. **Running/maintaining the Kayts office.**
2. **Implementing accountable and transparent programme and financial management.**
3. **Management of partnership agreements.**
4. **Staff and community leaders development.**
5. **Monitoring and reporting in English.**

**Applicants must be below the age of 55, have sufficient education to handle above tasks with a minimum of 5 years experience in related fields.**

**Applications must reach:**

*Programme Manager, FORUT,*
*67, Temple Road, Jaffna.*

before 31st July 2001.

**Only shortlisted candidates will be called for the interview.**

(89430)

## WESTERN UNION MONEY TRANSFER

வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றல்

சகல நாடுகளிலிருந்து பணப் பரிமாற்றம் செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் நியமிக்கப்பட்ட ஒரே நிறுவனம்

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**

212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021-2024/5

மேலும் உள்நாட்டு, வெளிநாட்டுக்கான (Video cassettes) வீடியோ கசற் + Audio Cassettes துரிதகதியில் அனுப்புவதற்குத் தொடர்புகொள்ளவேண்டிய நிறுவனம்

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**

(C/17251)

## JAFFNA MEDICAL ASSOCIATION

JMA cordially invites its members to participate in the
JMA
PRESIDENTIAL ADDRESS
BY
Dr.V.KUNANANDAM

Venue: NTS Lecture Hall, General Hospital, Jaffna.
Date: 2nd July 2001
Time: 4.30p.m - 5.30p.m

Dr.S.Muguthan
Hony Secretary JMA

(C/17253)

உ
சிவமயம்
சிவகாமி அம்மன் துணை

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆனி மாதம் 16 ஆம் நாள் இன்று (30-06-2001) சனிக்கிழமை காலை 7.25 மணிமுதல் 8.05 மணி வரையுள்ள கர்க்கடக லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரி

**செல்வி தர்மராஜா சகிதா**

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

* **இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**நல்வரவை நாடும்:**

**திரு.திருமதி தர்மராஜா (தருமு) குடும்பத்தினா**
*அம்மன் வீதி, திருநெல்வேலி.*

சிவகாமி றேடர்ஸ்
(தேங்காய் வியாபாரம்)
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**

சிவகாமி அம்பாள்,
**கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.**

(89540)

# இந்த வார இராசி பலன்

# 1-7-2001 - 7-7-2001

| | | | |
|---|---|---|---|
| | | சனி புத வெ | சூ வி ரா |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | |
| கேது | செ | சந் | |

## மாற்றம்

**01-07-2001 இல் சுவாதி 4 ஆம் பாதம் துலாம் இராசியில் சந்திரன் நிற்கும்.**

**03-07-2001 இல் மிதுனம் இராசியில் புதன் மாறும்.**

அரசியலில் திடீர்திடீரென மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும். அரசியல் சாணக்கியத் திருப்பு முனை ஏற்பட இடம் உண்டு. எதிர்க்கட்சிகளிடம் ஆண்டிமடங்கட்டிய கதை நடக்கும். உலக நாடுகள் கடும் அழுத்தங்களைக் கொடுக்கும். தொடர்கதையாக மக்கள் கலங்கியபடி இருப்பர். இந்தியா வடக்கு, தெற்கைப் பார்த்தபடி இருக்கும். அரசியல்வாதிகள் மனம் மாறுவர். மேற்கு உலகம், கிழக்கு, மத்திய நாடுகளில் பொருளாதார அழுத்தங்களைக் கொடுக்கும். இந்து, பசுபிக்சமுத்திரநாடுகளில் இயற்கையின் தாக்கம் ஏற்படும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

நீங்கள் அங்குமிங்கும் ஓடிச் சந்தர்ப்பத்திற்குத் தகுந்த மாதிரிக் கதைத்து அலுவல்களைச் செய்தபடி இருப்பீர்கள். உங்களை இந்தக் காலம் நம்ப முடியாது. தொழில் ஸ்தானத்தில் பேச்சு வன்மையால் காரியங்கள் நடக்கும். பொய்க்கோபம் வரும். புதிய வரவுகள் அதிகரிக்கும். இனஜனம், புத்திரர் சிறப்பு அடைவார்கள். தாயாருடன் — தாய்வழியினருடன் வாக்குக்கலகம் வரும். அரசியல்வாதிகள், அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். வயிற்று வருத்தம், கண் கூச்சம், வாய்வுத் தொல்லை கொடுக்கும். வியாபாரத்துறை, பாதுகாப்புத்துறை, மின்சாரத் துறை, தோட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி, சனி.

## இடபம்

தர்மம்பேசி, அன்னதானம் போட்டுப் போட்டு பல கருமங்களைச் செய்து வருபவர்களை எப்படி நம்புவது? தொழில் ஸ்தானத்தில் ஒரு மந்த நிலை ஏற்படும். வாங்கிய பணத்தைக் கொடுக்க முடியாத நிலை. கடன்பட்ட வரும் வரமறுப்பர். புதிய ஆடை அல்லது பொருள் வரும். நண்பர்கள் உதவுவார்கள். இடமாற்றமொன்று தேடிவரலாம். எதிர்ப்பாலருடன் நிதானமாக இருக்கவும். மாமன் வழியினரின் உதவிகள் கிடைக்கும். நெஞ்சுநோ, படபடப்பு, களைப்பு, சல வருத்தம் என்பனவரும். வீண் பழி கேட்பீர்கள். ரீ.வி, டெக், கொம்பியூட்டர் துறைகள், சட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி, சனி.

## மிதுனம்

சாக்குப் போக்குச் சொல்லித் தப்பிவிட்டு சண்டித்தனம் பேசித் தந்திரத்தால் செயற்படும் சில சுயநலவாதிகளை அதிரடிபோட்டு தந்திரமாக மடக்கிப்பிடிக்கத் தெரிய வேண்டும். இந்த அனுபவம் தொழில் ஸ்தானத்தில் வரும். வீண்பழி கேட்க நேரிடும். பொருள்தவறும். பிரயாணங்கள் ஏற்படச் சாதக சூழ்நிலை வரும். குடல்வருத்தம், தலைவலி, களைப்பு, சலிப்பு வரும். வாகனத்தில் நிதானமாக இருக்கவும். வியாபாரத் துறை, குருத்துறை, கோயில் துறை, அச்சுத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு இலாபங்கள் கிடைக்கும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி, சனி.

## கடகம்

எதிரிகள் உங்கள் நல்லெண்ணத்தைப் பலவீனமாக நினைக்கும் பொழுது நீங்களும் தந்திரமாகச் செயற்படுவதே புத்திசாலித்தனமானதாகும். தொழில் ஸ்தானத்தில் பதற்றநிலை அடிக்கடி வரும். எதிரிகள்கோள் சொல்லுவார்கள். இடமாற்றம் ஏற்படலாம். களவுகள் கவனம். வயிற்றில் குழப்பம், நெஞ்சுப் புகைச்சல், சலவருத்தம் என்பன கொடுக்கும் காலமாகும். அரசியல்துறை, அரசாங்கநிர்வாகப் பீடத்துறை, ஹோட்டல்துறை, பிரயாணத்துறை போன்ற துறையினருக்கு மாற்றங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், வியாழன், வெள்ளி, சனி.

## சிங்கம்

குற்றவாளிகளைத் தப்பவிடுவதனால் தான் – மேலும் குற்றங்களைச் செய்து பலருக்குத் துன்பங்கள் ஏற்படுகிறது. நல்லவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். தொழில் ஸ்தானத்தில் உறுதியான நடவடிக்கை எடுப்பீர்கள். பெரியவர்கள் உதவுவார்கள். குடும்பத்தில் கலகலப்பு இருக்கும், உஷ்ண பீடைகள், வாய்வுத் தொல்லை, நெஞ்சுநோ என்பன இருக்கும். இசைத்துறை, செய்தித்துறை, வியாபாரத் துறை, குருத்துறை, நிர்வாகத்துறை போன்றவர்களுக்கு சிறப்புக்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.

## கன்னி

வேகமான உலகில் குடும்பத்தினருடன் கவனமாக இருக்கவும். தொழில்ஸ்தானங்களில் படிப்படியான மாற்றங்கள் ஏற்படும். எதிர்ப்பாலார் வீண்பழி சுமத்தலாம். தூர இடங்களிலிருந்து செய்திகள் வரும். இடுப்புவலி. கிருமித் தாக்கம் மூலம் கர்ப்ப, இந்திரிய உபாதைகள் கொடுக்கலாம். உஷ்ண பீடைகள். வரும். பிரயாணத்துறை செய்தித்துறை, வியாபாரத் துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி,

## துலாம்

எந்தத்துறையிலும் இங்கு குழிபறிப்பவர்கள் அநேகர். அதனால் நல்லவர்கள் பலர் பாதிக்கப்படுகின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் இந்த அனுபவம் உங்களுக்கு வர இடம் உண்டு. சிலருக்கு திடீரென பிரயாணம் வரலாம். தானதர்மம் செய்வீர்கள். வீடுமனைச் சிறப்புக் கொடுக்கும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். நாரி உளைவு, நெஞ்சுவலி, தலைவலி, சளி என்பன கொடுக்கும். அரசியல் துறை, சட்டத்துறை, குருத்துறை, பாதுகாப்புத் துறை, வங்கித்துறை போன்ற துறையைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.

## விருச்சிகம்

பாசத்தால் கவலை துன்பம் தான். பழகிய தோஷத்தால் வேதனைகள் தேடி வரும். பக்கத்தில் இருப்பவர் அதட்டி உறுட்டி வேலை வாங்குவர். உதவிக்குப் போய் உபத்திரவம் ஏற்படும். குலப் பெருமை பேசி வீண் கலகம் வரும். புதிய பொருள்கள் வரும். தூரத்துச் செய்திகள் மனநிறைவைத் தரும். உடல் பலவீனம், நெஞ்சு, தொண்டை நோக்கள், நாரி, கைகால் பிடிப்பு என்பன வரும். மருந்துத்துறை, பாதுகாப்புத்துறை, வங்கித்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.

## தனுசு

குடியிருக்கும் வீட்டின் வாடகையைக் கொடுக்காமல் காடைத்தனம் செய்பவர்களை என்ன செய்வது? தொழில் ஸ்தானத்தில் படபடப்பு. அடிக்கடி கோவம் மேலதிகாரிகள் உதவி இருக்கும். புதிய செய்தி அல்லது பிரயாணங்கள் கொடுக்கும். மாற்றங்கள் சகஜம். எதிரிகளை வெல்லுவீர்கள் குடும்பத்தில் வாக்குக் கலகம் வரும். புத்திரர் அல்லது சகோதரர்கள் எதிர்ப்பர். இடுப்பு. கைகால்நோ, வயிற்று வருத்தங்கள் என்பன கொடுக்கும். பிரயாணத் துறை, வியாபாரத்துறை, சட்டத்துறை தொடர்பானவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன், வெள்ளி.

## மகரம்

அயலவர்கள் பொறாமையால் துன்பம் தருவார்கள். அவர்கள் உங்களிடம் பணம் பறிக்கவோ, நஷ்டங்களை ஏற்படுத்தவோ முனைவார்கள். எனவே வீட்டிலும் சரி தொழில் ஸ்தானத்திலும் சரி அயலவர்கள், நண்பர்களுடன் நிதானமாக இருக்கவும். விட்டு விட்டுப் பலன்கள் நடக்கும். கைகால் நோ, சளி, நரம்பு, உஷ்ண பீடைகள் கொடுக்கும். தூர இடங்களிலிருந்து நல்ல செய்திகள் வரும் என எண்ணாதீர்கள். சிலருக்கு பயம் வந்து இடம்மாற யோசனைகள் வரும். பிரயாணத்துறை. குருத்துறை, மருந்துத்துறை, விவசாயத் துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன், சனி.

## கும்பம்

வேகமாக தட்டிப்பறித்து வாழ முற்படுவதனால் நல்லவர்கள் வாழமுடியாத நிலை ஏற்படுகின்றது. தொழில் ஸ்தானத்தில் போட்டி ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுப்பர். அடிக்கடி கோபிப்பீர்கள். புதிய பொறுப் பொன்று வரும். செய்திகள். மகிழ்ச்சி தரமாட்டாது, நரம்புப் பிடிப்பு, பித்தக் கொதிப்பு, உஷ்ணபீடைகள், கை கால்நோ, நாரிநோ என்பன இருக்கும். ஹோட்டல் துறை, குருத்துறை, சட்டத் துறை, விவசாயத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்கள்– திங்கள், வியாழன், சனி.

## மீனம்

வேகமாகச் செல்பவர்கள் புளியமரங்களைக் கடப்பதில் அவதானமாக இருப்பது போல் இலுப்பையடிச் சந்தியிலும் கவனமாக இருக்க வேண்டும். அல்லது பல நல்லவர்களை, வல்லவர்களை நாம் இழக்க வேண்டி வரும். போல் இருக்கின்றது. தொழில் ஸ்தானத்தில் அவதானம். போட்டிகள் வரும், ஆனால் மேலதிகாரிகள் உதவுவார்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். அயலவர்கள் உபத்திரவம் தரலாம். இடமாற்றம் ஏற்பட இடம் உண்டு. நாரிநோ, சளித் தொல்லை, உஷ்ண பீடைகள் என்பன கொடுக்கும். பிரயாணத்துறை, விவசாயத்துறை ஹோட்டல்துறைவியாபாரத் துறை சட்டத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்கள்– திங்கள், வியாழன், சனி.

## மகாதேவா ஜோதிடம்

---

### வடமராட்சி வலயத்தில்

# முந்நூறு மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சி நிதி உதவி

வடமராட்சி, ஜூன் 30

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் 5 வரை கல்விபயிலும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் 300 மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சி நிதி வழங்கப்படவுள்ளது.

இந்நிதியை வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் வடமராட்சிக் கல்வி வலயத்தின் ஊடாக வழங்க முன்வந்துள்ளார்.

இக்கல்வி வளர்ச்சி நிதியை வழங்க வடமராட்சிப் பகுதியில் உள்ள 30 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, அப்பாடசாலைகளில் கல்வி பயிலும் — வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் — தாய் தந்தையரை இழந்த அல்லது தந்தையை இழந்த அல்லது தாயை இழந்த மாணவர்கள் தலா 10 பேர் வீதம் 300 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு மாதாந்தம் தலா நூறு ரூபா வீதம் நிதி வழங்கப்படும்.

தற்போது இதற்கென மாணவர்களின் விவரம் வடமராட்சி கல்வி வலயத்தினால் 30 பாடசாலைகளிலிருந்து சேகரிக்கப்பட்டு வருகின்றன.

(ஐ-173-118)

# புலிகளின் காவலில் உள்ள படையினருக்குப் பொருள்கள்

## கொழும்பில் இருந்து அனுப்ப ஏற்பாடு

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள கப்பல் மாலுமிகள் மற்றும் படையினர் 22 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் வழங்க சமாதானத்துக்கான பெற்றோர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இப்பொருள்கள் அடுத்த வாரம் கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவுள்ளன.

எம்.வி.மிஷன் கப்பல் புலிகளால் கைப்பற்றப்பட்டு நான்கு ஆண்டுகள் பூர்த்தியடைவதை ஒட்டி இந்த அத்தியாவசியப் பொருள்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக சமாதானத்துக்கான பெற்றோர் அமைப்பின் தலைவர் கப்டன் ஜானக தேனுவா தெரிவித்துள்ளார்.

(ஐ)

# சங்கக் கிளைகள் ஒரே இடத்தில்

யாழ். பல நோக்குக் கூட்டுறவு பாஷையூர், கொய்யாத் தோட்டம் ஆகிய சங்கக் கிளைகள் தற்காலிகமாக ஈச்சமோட்டையில் உள்ள 25 ஆம் இலக்கக் கிளையிலேயே செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாஷையூர், கொய்யாத் தோட்டம் பகுதி மக்கள் ஈச்சமோட்டைக் கிளைக்கே சென்று தமது நிவாரணப் பொருள்களைப் பெற்று வருகின்றனர்.

(ஐ-17)

# சென்.ஜோன்ஸ்தின நிகழ்வு

யாழ். தெற்குப் பிரதேச சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு நடத்தும் உலக சென் ஜோன்ஸ் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். தெற்கு பிரதேச மாவட்ட ஆணையாளர் எஸ். செல்வரஞ்சன் தலைமையில் நடைபெறும்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் என். தணிகாசலம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் முதன்மை விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பி. விக்கினேஸ்வரன், சட்டத்தரணி கே. கேசவன், யாழ். போதனா வைத்திய சாலை நிர்வாக உத்தியோகத்தர் இ. பத்மநாதன், டாக்டர் பீ. திருமாறன், சட்டத்தரணி வி. ரி. சிவலிங்கம், யாழ். இந்துக்கல்லூரி அதிபர் எ. சிறிக்குமரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(ஐ-17)

# படுகாயம்

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வளைவு ஒன்றில் திரும்பும் போது கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதால் அதனைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு நெல்லியடி பொன்.கந்தையா வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் உதயசங்கர் (வயது 36) என்பவரே காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர் ஆவார்.

(க-117)

# மருந்தாளர்கள் இன்றி இயங்கும் மருந்தகங்களை பதிய முடியாது

## உணவு, மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்30

யாழ்நகரில் மருந்தாளர்கள் இன்றி இயங்கும் மருந்தகங்களைப் பதிவு செய்ய முடியாது என்று உணவு, மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி எஸ். மகாதேவன் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக கூட்டத்தில் கலந்துகொண்டு, யாழ். நகரிலுள்ள மருந்தகங்கள் தொடர்பாக உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும் போது கூறியதாவது:-

யாழ்.குடாநாட்டில் 70 மருந்தகங்கள் இருக்கின்றன. இவற்றில் பல தகுதியற்ற மருந்தகங்களாக இருக்கின்றன.

இந்த மருந்தகங்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டுமானால் கொழும்பிலுள்ள மருந்துக் கட்டுப்பாட்டு அதிகார சபையிடம் அனுமதி பெறவேண்டும்.

மாநகர சபை எல்லைக்குள் மட்டும் 4 சில்லறை மருந்து விற்பனை நிலையங்களும் மூன்று மொத்த மருந்து விற்பனை நிலையங்களும் அனுமதியுடன் செயற்படுகின்றன. ஏறகனவே மருந்து விற்பனை நிலையங்கள் அனுமதி இன்றியே இயங்கி வருகின்றன.

தனியார் மருந்தகங்களில் வைத்தியர்கள் வழங்கும் சிட்டைகளுக்கு மட்டுமே மருந்துப் பொருள்கள் வழங்கப்பட வேண்டும். ஆனால் தற்பொழுது இவ்வாறான நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. மருந்துகளின் பெயரை சொன்னவுடனேயே பாமஸிகளில் மருந்துகள் வழங்கப்படுகின்றன.

யாழ். நகரிலுள்ள மருந்து விற்பனை நிலையங்களில் தடை செய்யப்பட்ட கருத்தடை மாத்திரைகள் சட்ட விரோதமாக விற்பனை செய்யப்படுகின்றன.

யாழ்.நகரில் ஆஸ்பத்திரி வீதியில் மட்டும் 14 மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. ஒரே வீதியில் இவ்வாறு பல மருந்தகங்கள் இயங்க அனுமதிப பத்திரங்கள் பெற்றுக்கொள்ள முடியாது.

யாழ். மாவட்டத்தில் 90 வீதமான வைத்தியர்கள் ஆயுர்வேத வைத்தியர்களாகவே காணப்படுகின்றனர். நோயாளர்களுக்கு ஆங்கில மருந்துகளை வழங்குவதற்கு இவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் அவர்கள் ஆங்கில மருந்துகளையே வழங்குகின்றனர்.

- எனவும் அவர் தெரிவித்தார். (ம-5-6)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 29 - 07 - 1961



உதிர்வு 10 - 07 - 2000

### அமரர் சாமிவேல் தனபாலு

**திதி: 30.06.2001**

எம் அன்புச் செல்வமே!
ஓராண்டு கழிந்தாலும் ஆறவில்லை எம் சோகம்
இன்னும் மாறவில்லை எம் வேதனை!
எம்மைக் கண்ணீரில் தவிக்கவிட்டு
கடவுளிடம் சேர்ந்த மாயம்தான் என்ன?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*ச.பாஸ்கரன்,*
*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.* (89590)

தந்தை, தாய்,
சகோதரர்கள்.

## நெஞ்சை விட்டகலாத நினைவஞ்சலி

31ஆம் நாள் — முதலாம் ஆண்டு



**செல்வி**
**விக்கினேஸ்வரன்**
**தாட்சாயினி** (தாட்சா)
(யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவி தரம் - 9)



**அமரர்**
**நாகரத்தினம்**
**விக்கினேஸ்வரன்**

**08.09.1987 ← தோற்றம் → 10.03.1946**
**31.05.2001 ← மறைவு → 18.06.2000**

அன்புக்கும் பண்புக்கும் அணிகலனாய்த் திகழ்ந்தீர்களே!
உங்களோடு வாழ்ந்த நாள்கள் வாழ்வில் மறக்க முடியாதவை
சிரிப்பான பேச்சும் கலகலப்பான முகங்களும் நெஞ்சங்களில் நிறைந்து
என்றும் நிலைத்து நின்று ஞாபகமூட்டிக் கொண்டேயிருக்கும்!

இன்று (30-06-2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*சின்னக்குளம்,*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.*
(89592)

உங்கள் பிரிவால் துயருறும்
**அன்பு, அம்மா, அம்மம்மா,**
**சகோதரர்கள்.**
(சகிலா, சயின்ராஜ், கோபி, கோமதி)

### சாகித்திய விழாக்கள்

நவாலி,ஜூன்30

வடக்கு-கிழக்கு பகுதியில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் சாகித்திய விழாக்களை நடத்துமாறு வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சு பிரதேச செயலகங்களுக்கு சுற்றறிக்கைகளை அனுப்பிவைத்துள்ளது.

இவ் விழாவினையொட்டி விளையாடுப் போட்டிகள், கவிதை, கட்டுரை ஆக்கம், நாடகம், கிராமிய நடனங்கள் இசை போன்ற துறைகளில் போட்டிகளை நடத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது. (ஐ-100)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்30

சுன்னாகம் கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு மன்றத்தின் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் அருட்திரு. ஏ.ஏ.போல் தலைமையில் மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

'இலங்கையில் தமிழ்ப் பெண்களின் பிரச்சினைகளும் தீர்க்கும் வழிகளும்' எனும் தலைப்பில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் கருத்துரை வழங்கவுள்ளார். (ம-10)

### மரண விசாரணை அதிகாரி விபத்தில் காயம்

தென்மராட்சி,ஜூன்30

ஆவரங்கால் பகுதியில் இடம் பெற்ற டிரக் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த குடும்பஸ்தர் கால் முறிந்து படுகாயமடைந்த சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

பளைப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரியான ம.குமாரவேலு (வயது 56) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-117)

## நிவாரணமாக வழங்கப்பட்ட

# பால் மா அருந்திய பிள்ளைகள் வயிற்றுளைவினால் பாதிப்பு!

## 22 பேர் மந்திகையில் அனுமதி

தென்மராட்சி,ஜூன்30

இடம்பெயர்ந்த மக்களுக்கு அண்மையில் மே மாத நிவாரண உலர் உணவுப் பொருள்களுடன் வழங்கப்பட்ட 'ரத்தி' **(RATHI)** பால் மா அருந்திய பல பிள்ளைகளும், பாலூட்டும் தாய்மார்களும் வயிற்றுளைவு நோய்க்கு இலக்காகியுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 23ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரையான ஆறு நாள்களில் 22 பிள்ளைகள் இந்தப் பால் மா பருகியதால் வயிற்றுளைவு நோய்க்கு இலக்காகி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

வயிற்றுளைவு நோயினால் பீடிக்கப்பட்ட பல குழந்தைகள் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப் பட்டது.

மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுபவர்களின் விவரம் வருமாறு:-

★ செல்வநாயகம் டயானிஸ்குமார் (வயது 2)
★ செல்வநாயகம் சசிகுமார் (வயது 4, இலட்சுமணன் தோட்ட முகாம், தும்பளை)
★ அருள்தாஸ் அனோஜன் (வயது 1 - குடத்தனை)
★ ஸ்ரனிலாஸ் றக்ஸனா (வயது 7மாதம் - மணற்காடு)
★ பாஸ்கரன் விதுஷா (வயது 9மாதம் - புலோலி தெற்கு)
★ யுஸ்ரின் குறூஸ் மேரிஜான்சிகா (வயது 7மாதம் - கல்லூரி வீதி, பருத்தித்துறை)
★ எஸ்.கிருஷாந்தி (வயது 2 - கரவெட்டி கிழக்கு)
★ கே.தினேஸ்குமார் (வயது 12 - கரணவாய்)
★ செல்வகுமார் (வயது 27 நாள்கள் - கந்த உடையார் வீதி, பருத்தித்துறை)
★ எஸ்.குகேந்தினி (வயது ஒன்றரை, புலோலி மேற்கு)
★ பி.பிருந்தாவன் (வயது 9, தும்பளை)
★ என்.நிஷாளினி (வயது ஒன்றரை - கூவில், புலோலி)
★ கே.காருண்யா (வயது 4 மாதம் - தும்பளை)
★ கே.நிஷாந்தா (வயது ஒன்றரை - வரணி)
★ எம்.சரிஜா (வயது 8மாதம் - புலோலி தெற்கு)
★ எஸ்.வாசுகி (வயது 3 - புலோலி தெற்கு)
★ எம்.மதுஷன் (வயது 1, தும்பளை)
★ பி.தர்சனா (வயது 4 - கரவெட்டி)
★ பி.தர்சிகா (வயது 7 - கரவெட்டி)
★ பி.நிதர்சன் (வயது 4 - உடுப்பிட்டி)
★ கே.தர்சினி (வயது 10மாதம், புலோலி தெற்கு)
★ வீ.பிரதீப் (வயது 9 - வல்வெட்டித்துறை)

(ஐ-117)

### பாலர் இல்ல விளையாட்டு விழா

வலிகாமம் தெற்கு, ஜூன்30

பாலர் கல்வி நிர்வாகத்தால் நடத்தப்பட்டு வரும் ஞானக்குழந்தை இல்ல பாரதி பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு பாடசாலை ஆசிரியை செல்வி கு.விஜயலதா தலைமையில் உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைத தலைவர் க.கமலசேகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக 'மணியோசை' க.அருந்தவராசா, ஐ.விஜயகாந்தன், சி.க.சிதம்பரநாதன் ஆகியோரும்-

கௌரவ விருந்தினர்களாக சிவநேயர் இ.தவகோபால், திருமதி தெ. இரத்தினகோபால், திருமதி செல்வவிநாயகம் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

(ஐ-152)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு.அ.தனபாலசிங்கம்
அவர்களின் அன்புச் சகோதரி

**திருமதி**
**சுந்தரம்மா சுப்பிரமணியம்**

அவர்களின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(C/17256)

உ
சிவமயம்

## திருமணத் திருநாள்

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களம் பொருந்திய விஷு வருடம் ஆனி மாதம் 16ஆம் நாள் இன்று (30.06.2001) சனிக்கிழமை ஏகாதசி திதி, சுவாதி நட்சத்திரம், அமிர்த சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் மாலை 6.30 மணி முதல் 8.30 மணிவரை உள்ள விருட்சிக லக்கினத்தில்

**காலஞ்சென்ற திரு.சின்னத்தம்பி,**
**திருமதி புவனேஸ்வரி**
**தம்பதியினரின் புதல்வன்**
**ராஜகோபால் (கோபால்)**
**அவர்களுக்கும்**



**காலஞ்சென்ற திரு.வேலுச்சாமி,**
**திருமதி பொற்கமலராணி**
**(கமலா) தம்பதிகளின் புதல்வி**
**பானுமதி (மஞ்சு)**
**அவர்களுக்கும்**

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருள் துணை கொண்டு திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்திருப்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

திருமண மண்டபம்: **ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் திருக்கோயில் கல்யாண மண்டபம்,**
**இல. 5, சாப்பல் றோட், வெஸ்ட் ஈலிங், W 1 3 9 AE லண்டன்.**

**திருமதி சின்னத்தம்பி குடும்பத்தினர்**
சின்னத்தம்பி வளவு,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

**திருமதி வேலுச்சாமி** (கிளிச்சித்தப்பா) **குடும்பத்தினர்**
தீருவில் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

**(இருவீட்டார் அறிவிப்பு)** (C/17257)

# சுயாதீன அமைப்பு ஒன்றின் மூலமே மிதிவெடிகள் அகற்றப்பட வேண்டும்

## தென்மராட்சி நிலைமை குறித்து அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன்30

தென்மராட்சிப் பகுதியில் சுயாதீனமான ஓர் அமைப்பின் மூலம் மிதிவெடிகள் அகற்றப்படும் வரை அங்கு மக்களை மீளக் குடியமர அனுமதிக்கக்கூடாது.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மருத்துவத் துறைத் தலைவர் டாக்டர் என்.சிவராஜா தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மிதிவெடி செயற்பாட்டுக் குழுவின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், மிதிவெடி செயற்பாட்டுக் குழுவினர், (யாழ்.செயலகம்) மற்றும் செயலக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் அங்கு கூறியதாவது:-

தென்மராட்சியில் மிதிவெடிகள் அகற்றப்படாமலே மக்கள் அங்கு சென்று வருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அங்கு மிதிவெடிகளில் சிக்கிக் காயமடைவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தென்மராட்சிப் பகுதியில் இராணுவத்தினரால் மிதிவெடிகள் அகற்றப்படுவதாகக் கூறப்படுகிறது. இராணுவத்தினரைப் பொறுத்தவரை அவர்கள் முக்கிய வீதிகள் மற்றும் இடங்களிலுள்ள மிதிவெடிகளை மட்டுமே அகற்ற முடியும். மக்கள் இருப்பிடங்களில் உள்ள மிதிவெடிகள் அகற்றப்படுவது மிகக் குறைவாகவே இருக்கும்.

ஐ.நா. போன்ற சுதந்திரமான அமைப்புகள் மூலம் இங்குள்ள மிதிவெடிகள் அகற்றப்பட்ட பின்னரே மக்கள் மீளக் குடியமர அனுமதிக்க வேண்டும்.

மிதிவெடிகள் அகற்றப்படாத நிலையில் தென்மராட்சிப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கக் கூடாது- என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கைதடியில் மக்கள் மீளக் குடியமரத் தொடங்கியிருப்பதால் மிதிவெடிகள் இருக்கக்கூடிய இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அப்பகுதியில் 'மிதிவெடி அபாயம்' என்ற வாசகம் எழுதப்பட்ட பெயர்ப் பலகைகள் நாட்டப்படவேண்டும் என்றும் -

முதற் கட்டமாக 250 பெயர்ப் பலகைகளை அப்பகுதிக்கு அனுப்பி வைப்பது என்றும் -

இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(ஐ-5)

### பிணை அனுமதி

கொழும்பு,ஜூன்30

விடுதலைப் புலிகளுக்கு அமைச்சர் அஷ்ரப் பற்றிய தகவல்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட அக்கரைப்பற்று பூசகரைப் பிணையில் செல்ல மட்டக்களப்பு நீதிமன்ற நீதிபதி அனுமதியளித்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு அக்கரைப்பற்றுப் பகுதியில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட அரசரத்தினம் செந்தில்நாதன் என்ற அக்கரைப்பற்று மாணிக்கப் பிள்ளையார் ஆலய பூசகரே 5 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டவராவார்.

### சமய சொற்பொழிவு

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் தொடர்ந்து நடைபெற்றுவரும் திவ்ய பிரபந்த உரையில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கே.கே. கணேசன் "மனிதநேயம்" என்னும் பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

(க-7)


லஷ்சுமி இணுவில்.

விஜயகாந்த்,லைலா, நாசர் நடிப்பில்

கள்ளழகர்

(ரீல்ஸ்)

S.T.R.பிலிம்ஸ் புதிய வெளியீடு.

இனிய பாடல்கள், சண்டை காட்சிகள் நிறைந்த படம்.

தினசரி காட்சிகள : 10.30, 2.30 (ப.நே.)

(கடைசி வாரம்)

(89603)



நாகம்ஸ் சுன்னாகம்

இன்று முதல்

சுப்பர்ஸ்ரார் விஜயசாந்தி, சரத்குமார், வெங்கடேஸ் நடித்த

முதலமைச்சர் ஜெயந்தி

வெண்திரையில் முதன் முதல் சுப்பர் ஸ்ரார் விஜயசாந்தியின் படம்

(ரீல்ஸ் வெளியீடு)

தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)

சனி, ஞாயிறுகளில் 6.30 காட்சியும் உண்டு

(89597)



ராஜா யாழ்ப்பாணம்

9வேடங்களில் நடித்த

அஜித்,

வசுந்துராதாஸ், நக்மா, மீனா

மற்றும் பலர் நடிப்பில்

CITIZEN சிட்டிசன்

தினசரி 10.30, 2.30 (புதிய நேரம்)

சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00(பு.நே)

(C/17030)


### நிர்வாக சேவை பரீட்சைக்கு அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்30

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்காக இன்று நடத்தப்படும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் மூவரின் அனுமதி அட்டைகள் யாழ்.மத்திய கல்லூரியில் உள்ள பரீட்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்-

சம்பந்தப்பட்டவர்கள் அங்கு சென்று அனுமதி அட்டைகளைப் பெற்று பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும் -

யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் பற்றிய விவரமும் பரீட்சை மண்டப இலக்கமும் வருமாறு:-

ரி.கரிகரன்(ஏழாலை - அறை இல.03), எஸ்.சிவநேசன் (15/1, ஓடை லேன், யாழ்ப்பாணம் - அறை இல.02), சி.ராஜ்மோகன்(கைதடி அறை இல.02).

(க-7)

### நிறுவுநர் நினைவு தினம்

இணுவில் மத்திய கல்லூரி நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரி திறந்த வெளியரங்கில் அதிபர் துரை எங்கரசு தலைமையில் நடைபெற உள்ளன.

கோப்பாய்ப் பிரதேச செயலர் கதிரவேலு கேதீஸ்வரன் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்.

தேசிய கல்வி நிறுவன கல்வி டிப்ளோமா விரிவுரையாளர் கலாநிதி தாமோதரம்பிள்ளை அமிர்தலிங்கம் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் கலந்து கொள்வார். திருமதி திருமலர் ராணி கேதீஸ்வரன் பரிசில்கள் வழங்குவார்.

(ஐ152)


உ

கோண்டாவில் மேற்கு

**ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வசந்த மண்டப அடிக்கல் நடும் விழா**

நாளை (01.07.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு

மேற்படி ஆலய உற்சவ கால

**பிரதமகுரு சிவஸ்ரீ சிறிஸ்கந்தராசக் குருக்களின்** தலைமையில்

நல்லூர் பிரதேச சபைத் தலைவர்

**திரு.க.மணிபல்லவராஜன்** அவர்களால்

ஆலய வசந்த மண்டபத்துக்கு அடிக்கல் நட்டு வைக்கப்படும்.

எனவே சகல அடியார்களையும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

(89598) - ஆலய பரிபாலன சபை.



**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**

**தற்காலிக இணைப்பு விரிவுரையாளர் பதவி வெற்றிடத்துக்கு உடனடியாக ஆள் சேர்த்தல்**

கீழ்வரும் தகைமையுடைய அரச பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவாகும் விரிவுரையாளர் வலயக் கல்விப்பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்வி அமைச்சின் விடுவிப்பு பெற்றுக்கொண்டதன் பின்னர் இணைத்துக்கொள்ளப்படுவர். ஆர்வமுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரங்களுடன் நாளை மறுதினம் (02.07.2001) திங்கட்கிழமை காலை 9.30மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு நேரில் வருகை தரவும்.

குறைந்தது 07 வருட ஆசிரிய அனுபவம், துறைசார்ந்த பட்டப்படிப்புடன் கலவி டிப்ளோமா மற்றும் தொழில்சார் அனுபவம் உடையவர்கள், உடற்கல்வி பாடத்துக்கு ஆசிரிய கலாசாலைகளில் விசேட பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| ஆரம்பக்கல்வி | - 02 பேர் | உடற்கல்வி | - பெண்மட்டும் 01 |
| தொழில்சார் | - 02 பேர் | மனையியல் | - 01 |
| தமிழ் | - 01 | சமூகக்கல்வி | - 01 |
| சித்திரம் | - 01 | | |

அதிபர்,
*ஆசிரிய கலாசாலை,*
*கோப்பாய்.*

(89599)



# வலயக் கல்வித் திணைக்களம், வடமராட்சி
# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான கேள்விகள் கேள்விச் சபைத் தலைவரும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 2001.07.20 ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்வி தாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல | பாடசாலை பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | யா/நெல்லியடி மத்திய ம.வி. க.பொ.த.(உ/த) வகுப்புக்கான விஞ்ஞான கூடம் அமைத்தல் | ரூபா 750/- | ரூபா 23,000/- |

01. மேற்படி வேலைக்கு இக்ராட்(ஐசீரிஏடி) நிறுவனத்தின் தரம் எம் 07உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கு பதிவு செய்துகொண்டவர்களும் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.

02. பொருள்கள் சேவை வரிக்கான (ஜீஎஸ்ரி) பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கும் விண்ணப்பகாரருக்கே கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

03. கேள்விப்பத்திரங்களில் பொருள்கள் சேவை வரி (ஜீஎஸ்ரி) சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை பொருள்கள் சேவை வரி (ஜீஎஸ்ரி) சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

04. வேலைக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப்பணத்தை வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப்பத்திரங்களை 2001.07.02ஆம் திகதி தொடக்கம் 2001.07.10ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வடமராட்சி வலய பாடசாலை வேலைகள் கிளையில் கட்டட பரிசோதகரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்விப் பத்திரங்கள் யாவும் இருபிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப் பிரதியும் இணைப் பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டு உறைகளின் இடதுபுற மேல்பக்கத்தில் வேலையின் விவரம எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரையிடப்பட்டு *"மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை, செம்மணி வீதி, யாழ்ப்பாணம்"* என விலாசமிட்டு மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் கேள்விப்பத்திரப் பெட்டியில் 2001.07.20ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

06. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேலையைப் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆவணங்கள் சரியாக இணைக்கப்படாத, சரியாக நிரப்பப்படாத, பிழையான கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை வடமராட்சி வலய பாடசாலை வேலைகள் கட்டட பரிசோதகரிடம் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகின்றேன்.

**கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை,**
**கேள்விச் சபைத் தலைவர்,**
**மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்.மாவட்டம்.**

*பாடசாலை கட்டட வேலைக் கிளை,*
*வலயக் கல்வித் திணைக்களம்,*
*வடமராட்சி வலயம்.*

(C/17259)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி குழந்தை அன்னம்மா

அரசடி வீதி, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி குழந்தை அன்னம்மா நேற்று (29.06.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறன் குழந்தையின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2001) சனிக்கிழமை பி.ப. 2.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*267/5, 2ஆம் ஒழுங்கை,*
*அரசடி வீதி,*
*நல்லூர்.*

(89600)

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## செல்லத்தம்பி அமரசிங்கம்

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை சிவலிங்கப்புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி அமரசிங்கம் (முன்னாள் உப தபாலதிபர், ஆனைப்பந்தி) 29.06.2001 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பி மற்றும் இராமாசிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமநாதர் - இராசமணி ஆகியோரின் அன்பு மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் அன்பழகனின்(பிரான்ஸ்) அன்புத் தந்தையும் புஷ்பவதி, கோபாலபிள்ளை, நல்லம்மா, வீரசிங்கம், பரநிருபசிங்கம், குலசிங்கம், பரிமளாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சதாசிவம், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் இராசலிங்கம், நாகம்மா, நல்லம்மா, இராசலட்சுமி சரோஜினிதேவி, ரவிந்திரன்(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், கொழும்பு), தினகரன் (கொழும்பு), றுபாவதி (ஆசிரியை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), கருணாவதி, கலாவதி(ஆசிரியை யாழ்.இந்து மகளிர் கல்லூரி), நந்தாவதி(ஜேர்மனி), சுவேந்திரன்(ஸ்ரீ சிவன்கோயிலடி) தயாவதி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நகுலேஸ்வரி (கொழும்பு), இராஜேஸ்வரி(கொழும்பு), கிருஷ்ணபவா(ஓய்வுபெற்ற ஆசிரியர்), குலநாயகம்(மிருசுவில் உப தபால் கந்தோர்) பூலோகசிங்கம், பஞ்சலிங்கம், இராஜசிறி, சத்தியநாதன் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(01.07.2001) ஞாயிறு காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக யாழ்.கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவலிங்கப்புளியடி,*
*வண்ணார்பண்ணை.*

(89601)

தகவல்:
திலகவதி
(மனைவி)

# வலைப்பந்தாட்டப் போட்டியில் யூனியன் கல்லூரி சாம்பியன்

*- திருகோணமலைச் செய்தியாளர்-*

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய பெரு விளையாட்டுக்களில் நேற்று 19 வயதுப் பெண்களுக்கான வலைப்பந்துப் போட்டியில் யாழ்.யூனியன் கல்லூரி அணி யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியைத் தோற்கடித்துச் சாம்பியனாகியது.

பெரு விளையாட்டுக்கள் நேற்றுப் பூர்த்தியாகின.

வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சின் செயலாளர் சு. அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். திருமதி க.அமிர்தலிங்கம் வெற்றி பெற்ற அணிகளுக்கான பரிசுகளையும் வெற்றிக் கிண்ணங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார். (உ-145)



நேற்றைய வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியின் போது பிரதம அதிதியாக கலந்துகொண்ட மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை அமைச்சின் செயலாளர் சு.அமிர்தலிங்கத்துக்கு யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவிகள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதைப் படத்தில் காணலாம். அருகில் மாகாணக் கல்விப்பணிப்பாளர் இ.சிவானந்தன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.புலேந்திரன், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் திருமதி ச.சூரியமூர்த்தி, ஜனாப் எம்.றாபி, எஸ்.பேரின்பதாசன் ஆகியோர் காணப்படுகின்றனர்.



19 வயதுக் கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற யாழ்.மகாஜனக் கல்லூரி அணித்தலைவர் பிரதம அதிதியின் பாரியாரிடமிருந்து வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்கின்றார்.

## படையினரின் மனித......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்லுறவுகள் என்பன இன்று அன்றாட நிகழ்வுகளாகி விட்டன. அரசாங்கம் யுத்தத்தையும் இனப் பிரச்சினையையும் காரணங்காட்டி இம் மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்தி வருகின்றது. சில சமயங்களில் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்காகவும் மனித உரிமை ஆர்வலர்களை திருப்திப்படுத்துவதற்காகவும் ஒரு சில படையினரைக் கைது செய்வதும், பின்னர் அவர்களை விடுதலை செய்வதும் வழக்கமாக உள்ளது. இவற்றைத் தொடர்ந்து அனுமதிப்பதென்பது அரச படைகளின் அடாவடித்தனத்தையும் கட்டாக்காலித்தனத்தையும் தமிழ் மக்கள் ஜீரணித்து ஏற்றுக் கொள்கிறார்கள் என்று அர்த்தப் படுத்திவிடும்.

அரசாங்கம் இன்று கூச்சநாச்சமில்லாமல் கூறும் "விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில்" அதாவது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் படையினரின் அட்டூழியங்களும் அடாவடித்தனங்களும் பலமடங்காக அதிகரித்து வருகின்றன. உலகமெல்லாம் அறிந்த செம்மணிப் படுகொலைகளும், மிருசுவில் படுகொலைகளும் இதற்கு ஓரிரு உதாரணங்களாகும். பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்குவது பின்னர் அவர்களைக் கொலை செய்வது என்பதும் படையினருக்கு பொழுது போக்காகிவிட்டதாகத் தோன்றுகின்றது.

கைதடியில் கிருஷாந்தி என்ற மாணவி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுப் பின்னர் கொலை செய்யப்பட்டார். புங்குடுதீவில் சாரதாம்பாளும் கல்முனையில் கோணேஸ்வரியும் மன்னாரில் கமாலிட்டாவும் அதன் பின்னர் அண்மையில் சிவமணி, விஜிகலா இருவரும், இவ்வரிசையில் இறுதியாகக் கொழும்பு மருதானைச் சோதனைச் சாவடியில் மலையகத் தமிழ்ப் பெண் ஒருவரும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

படையினரின் மற்றும் பொலீஸாரின் கட்டாக்காலித்தனம் பரவிவிட்டதையே இது உணர்த்தி நிற்கின்றது. கொழும்பிலுள்ள பொலீஸ் நிலையங்கள், இராணுவ சோதனைச் சாவடிகள் பாலியல் வன்முறைக் கூடங்களாக மாறியுள்ளன. தமிழ்ப் பெண்கள் என்றால் கேள்வி கேட்க யாரும் இல்லை என்றே படையினர் கருதுகின்றனர். அரசும் நீதிமன்றங்களும் படையினரின் வன்முறைகளைப் பொறுத்தவரை ஏனோ தானோ என்று தான் முடிவுகள் எடுக்கின்றன.

வடக்கு - கிழக்கு நீதிமன்றங்களில் இருந்த இவர்களுக்கு எதிரான வழக்குகள் யாவும் அவர்களுக்கு சாதகமாகத் தென்பகுதிக்கு மாற்றப் படுகின்றன. படையினரின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக காத்திரமான நடவடிக்கைகள் எடுக்க அரசு தயங்கி வருவதையே இது உணர்த்தி நிற்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சாசனங்கள், இலங்கை அரசமைப்பின் மனித உரிமை சரத்துக்கள் அனைத்துமே இலங்கை அரசால் பட்டவர்த்தனமாக மீறப்பட்டு வருவதையே அது வெளிக்காட்டுகின்றது. இம்மோசமான மனித உரிமை மீறல்களை இலங்கை மக்களும், சர்வதேச சமூகமும் அனுமதிப்பது என்பது அரச பயங்கரவாதத்துக்கு துணைபோவதென்பதாகும்.

அரச படைகளின் இக்காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளைக் கண்டித்து இதனை சர்வதேச சமூகத்தினதும், தென்னிலங்கையிலுள்ள ஜனநாயக சக்திகளினதும் கவனத்திற்கு கொண்டு வருவதற்காகவும், சிங்கள பௌத்த சகோதரர்களின் பௌத்த மனச் சாட்சியைக் கட்டியெழுப்புவதற்காகவும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் ஏகோபித்த எதிர்ப்பைக் காட்டும் முகமாக வருகின்ற ஜுலை 6ஆம் திகதியை அரச படையினரின் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான எதிர்ப்புத்தினமாகப் பிரகடனப் படுத்துவதாக தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம் ஜுலை 6ஆம் திகதியன்று வடக்கு - கிழக்கின் சகல பிரதேசங்களிலும் பொதுமக்கள் தமது கடைகளைப் பூட்டியும் பல்கலைக்கழக - பாடசாலை மாணவர்கள் வகுப்புக்களுக்குச் செல்லாமல், வீதிகளில் நடமாடாமல், வீடுகளில் இருந்து பூரண ஹர்த்தாலை அனுஷ்டிப்பதன் மூலம் வடக்கு - கிழக்கு தமிழ்பேசும் மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பில் சகல மனித உரிமைகள் ஆர்வலர்களையும் ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் இணைத்த ஆர்ப்பாட்டமொன்றை ஜுலை 6ஆம் திகதியனறு நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-க-3)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் - படைத்தரப்பு கூறியுள்ளது.

சடலம் இனங்காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப இளைஞன் தங்கியிருந்த வீட்டில் இருந்து படையினர் சில ஆயுதங்களை மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதும், அதை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.(க-3-10-86-139)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறான நிலை ஏற்படுவதற்கு ஐ.தே.கட்சி ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. அதேவேளை அவசரகாலச் சட்டத்தைத் தோற்கடிக்க எடுக்கப் படும் நடவடிக்கைகளை ஐ.தே. கட்சி கைவிடவேண்டும்.

இன்றைய அரசியல் குழப்ப நிலைகள் அனைத்துக்கும் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீமே காரணம்.

எது நடந்தாலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்கவே தொடர்ந்து பதவியிலிருப்பார் என்பதால் அரசு தனது அதிகாரங்களைத் தக்க வைத்துக்கொள்ளும் என்பதில் நாம் நம்பிக்கையாக இருக்கின்றோம்.

தற்போதைய நெருக்கடிகளைப் பயன்படுத்தி ஜே.வி.பி. 'குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க' முயல்கின்றது.

ஜே.வி.பியின் ஆதரவின்றியே நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்கமுயும் என்ற நம்பிக்கை - உறுதி - அரசுக்கு உள்ளது.

- இவ்வாறு அவர் கூறினார்.

இந்த பேட்டியின் ஆரம்பத்தில், அரசுத் தரப்பில் இருந்து எந்த எம்.பிக்களும் கட்சி மாறமாட்டார்கள் என்று உறுதியாகக் கூறிய அமைச்சர் அந்தப் பேட்டியின் இறுதிக்கட்டத்தில் தங்கள் தரப்பில் இருந்து மூன்று எம்.பிக்கள் வெளியேறக் கூடும் என்று குறிப்பிட்டார். அவர்கள் வெளியேறினாலும் தங்களுக்கு பிரச்சினை ஏதும் இல்லை என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்தார். (உ-3-7)

## சந்திரிகா தலைமை....

(முதலாம் பக்கத் தொடர்சி)

நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐ.தே.கட்சி சமர்ப்பித்துள்ளமைக்கான உள்நோக்கம் என்ன என்பது குறித்து மக்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் எதிர் வரும் 4ஆம் திகதி புதன்கிழமை பொது ஜன ஐக்கிய முன்னணியின் கூட்டுத் தொழிற்சங்கச் சம்மேளனம் கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் மறியற் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகவும்-

அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-7)

## லண்டனில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லண்டனில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று தமது 56 ஆவது பிறந்த நாளை அவருடைய பிள்ளைகளுடன் கொண்டாடியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, எதிர்வரும் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அவசரகால சட்ட நீடிப்பு விவாதம் நடைபெறவுள்ளதால் ஆளும் கட்சி எம்.பிக்கள் எவரும் அது வரை வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடாது என்று அவர் லண்டனில் இருந்தவாறு பணிப்புரை விடுத்ததாகத் தெரிவிக்கப் படுகிறது. (க-7-4)


IIS இல்

அதிரடி விலைச் சலுகையில் கணனிகள்

நவீன கணனிகள், உதிரிப்பாகங்களை உள்ளடக்கிய விசேட காட்சியறை ஒன்று எதிர்வரும் 05-07-2001 முதல் 14-07-2001 வரை IIS தலைமை அலுவலகத்தில் ஒழுங்கு செய்யப்படவுள்ளது.

இங்கு நவீன கணனிகளையும் உதிரிப்பாகங்களையும் பார்வையிடுவதுடன் மட்டுமல்லாமல் நீங்கள் கொழும்பு விலையில் பல்வேறு சலுகைகளுடன் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

மேலதிக விவரங்களை
1.7.2001ஆம் திகதிய உதயனில்
பார்க்கத் தவறாதீர்கள்!

Director, IIS,
100, Clock Tower Road,
Jaffna.

(C/17233)



இதயம் கொள்ளை போகும்

மாசிமரும் இன்னிசை விருந்து

வித்தியாசமான அரங்க வடிவமைப்பில்
யாழ்.முன்னணி இசைக் கலைஞர்களுடன்
யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தினர் இணைந்து வழங்கும்

மதுர கானங்கள்

(இன்னிசை நிகழ்ச்சி)

காணத்தவறாதீர்கள்

இடம் : கைலாசபதி கலையரங்கு, யாழ்.பல்கலைக்கழகம்.

காலம் : நாளை (01.07.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி, மாலை 2.30

அன்பளிப்பு :- 50, 100, 500, 1000 ரூபா

(நுழைவுச் சீட்டுக்களை நுழைவாயிலில் பெற்றுக்கொள்ளலாம்)

விளம்பர அன்பளிப்பு:
ஹரிஹரணன் பிறின்டேர்ஸ்
424A, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.

(C/17260)



யாழ்.பல்கலைக்கழக
நுண்கலைத்துறையும் கலைவட்டமும்
இணைந்து வழங்கும்

முழுசம் நிகழ்வுத் தொடர்-4
தஞ்சாவூர்



கண்ணாடி ஓவியங்களின் காட்சி

ஜுன் 30 காலை 10.00 மணி – 4.00 மணி வரை.

இடம் : நூலக கேட்போர் கூடம், யாழ்.பல்கலைக்கழகம்.

பிரவேசம் 10/-

சிறப்புற வாழ்த்துவோர்:–

(89504)

VANATHI & ABRAME VILLASS
214, SIR PON. RAMANATHAN ROAD,
THIRUNELVELY, JAFFNA.
T.P 021 - 2360

WHEEL MOVERS
தொலைத்தொடர்பு,
போட்டோ பிரதி சேவை
642, பருத்தித்துறை வீதி, நல்லூர்
T.P.: 2179, 2443, 3237.
FAX :- 2179


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.